பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 26 | செவ்வாய்க்கிழமை | (08.06.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 172

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி யாழில் மாபெரும் கண்டனப் பேரணி

## வெள்ளிக்கிழமை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள இடையூறாகவுள்ள தடைகளை அகற்றுதல், மீள்குடியமர்வைத் துரிதப்படுத்துதல், உண்மைகளை உரைக்கும் கிழக்கு மாகாண தமிழ்த் தேசியப்பற்றாளர்கள் மீதான படுகொலைகளை நிறுத்தவும கொலையாளிகளை இனங்காணவும் வலியுறுத்தி எதிர்வரும் 11ந் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

கண்டனப் பேரணிக்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இது விடயம் தொடர்பாக ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ப.கனகலிங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் நழுவல் போக்கினால் இனப்பிணக்கிற்குத் தீர்வு காணும் முயற்சிகள் கேள்விக் குறியாக மாறியுள்ளன.

பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் எதிர் கொண்ட தமிழ் மக்கள் சமாதான வழியில் ஓர் தீர்வு கிடைக்குமென எதிர்பார்த்திருக்கின்றனர். ஆனால் அந்த எதிர்பார்ப்பு மங்கிவருகிறது.

போர் நிறுத்தம் ஏற்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஐ.தே.க தடையாக இருக்காது

### எடுத்துக் கூறுகின்றார் எஸ்.பி.

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு தமது கட்சி பூரண ஆதரவு வழங்குமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் தடையாக இருக்க மாட்டாது.

ஆனால், அரசில் அங்கம் வகிக்கின்ற ஜே.வி.பிபோன்ற சில கட்சிகளே சமாதான நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டையாக இருந்து வருகின்றன.

இதனை உலக நாடுகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண

# அனைத்துக் கட்சிகளும் உதவ வேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா பகிரங்க அழைப்பு



(நமது நிருபர்)

**கடந்த இரண்டு தசாப்த காலமாக நடைபெற்று வரும் கொடிய யுத்தத்தை முடிபுக்குக் கொண்டுவந்து ஐக்கிய இலங்கைக்குள் சுதந்திரமான ஜனநாயக ரீதியில் நிரந்தர சமாதானத்தைக் காண்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கண்டி மயிலப்பிட்டிய இராணுவ நினைவுச் சதுக்கத்தில் நேற்று நடைபெற்ற, யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாப்பதற்கு 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படைவீரர்கள் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.இது அவர்களால் நாட்டுக்காகச் செய்யக் கூடிய ஆகக் கூடிய தியாகம் ஆகும்.

ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்கள் எக்கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் தமது குறுகிய கால பேதங்களை மறந்து நிரந்தர சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் இணைந்து செயற்பட அனைத்து அரசியல் கட்சிகளும் முனவர வேண்டும்.

நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தர சமாதானத் தீர்வைக் காண்பதே எமது நோக்கமாகும். 20 வருட கால யுத்தம் தற்போது தற்காலிகமாக ஓய்ந்துள்ளது. இந் நிலையில் அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்தை அர்ப்பணிப்புடன் கடைப்பிடித்து வருகின்றனர். நிரந்தர சமாதானத்தை நாம் நோக்கிச் செல்லும் போது பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்து புல தடைகளையும் தாண்ட வேண்டியுள்ளது.இதற்காக முப்படை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவொன்று, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவில் சுரேஸ் பிரேமச்சந்திரன், மாவை.சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கியிருந்தனர்.

இடைநிறுத்தப்பட்டுள்ள அர

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் தார்மீக ஆதரவு உண்டு

### *ஜனாதிபதி அப்துல்கலாம்*



(புதுடில்லி)

இலங்கையில் வாழும் சகல இன மக்களினதும் தேவைகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசின் ஆதரவு என்றும் உண்டு என இந்திய ஜனாதிபதி கலாநிதி ஏ.ஜே.அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி அமைக்கப்பட்ட பின்னர் நேற்று இடம் பெற்ற ராஜ்ய சபா, லோக்சபா ஆகியவற்றின் முதலாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசிய போதே இந்திய ஜனாதிபதி கலாநிதி ஏ.ஜே.அப்துல்கலாம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாடு,இறைமை ஆகியவற்றுக்கு பங்க மேற்படாத வகையில் அங்கு வாழும் சகல இன மக்களினதும் தேவைகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதான இலங்கை அரசின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா என்றும் உதவி செய்யும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏ.எச்.எம். அஸ்வர் எம்பியாவார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் இடம் பெற்றிருந்த முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களான இஸ்மாயில், புஸ்பகுமார ஆகியோர் இராஜிநாமாச் செய்ததையடுத்து மேற்படி இருவரின் வெற்றிடங்களுக்கு மூவரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

முன்னாள் எம்.பி. ஏ.எச்.எம். அஸ்வரின் பெயரை பெரும்பாலான உறுப்பினர்கள் சிபார்சு செய்துள்ளனர். இவருடன் மேலும் பசீர் சேகுதாவுத், எம்.நிஜாப்டீன் ஆகிய இருவரின் பெயர்களும் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (த)

## அம்புலன்ஸ் வண்டி விபத்து தாதிகள் இருவர் காயம்

### *நெல்லியடியில் நேற்றுச் சம்பவம்*

(யாழ்ப்பாணம்)

மந்திகை மருத்துவமனையிலிருந்து நோயாளர்கள் இருவரை ஏற்றிக் கொண்டு, யாழ்.போதான வைத்தியசாலைக்கு வந்து கொண்டிருந்த அம்புலன்ஸ் வண்டி விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த மருத்துவத் தாதிமார் இருவர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை மந்திகை மருத்துவமனையிலிருந்து புறப்பட்ட அம்புலன்ஸ் வண்டி நெல்லியடியில் லொறி ஒன்றுடன் விபத்துக்குள்ளானது. இதன் போது அம்புலன்ஸ் வண்டியின் கண்ணாடிகள் நொருங்கின.

இதேவேளை மேற்படி அம்புலன்ஸ் வண்டியில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியும் சென்றதாகத் தெரியவருகிறது.

விபத்தில் காயமடைந்த தாதிகளுடனும், நோயாளர்களுடனும் அம்புலன்ஸ வண்டி யாழ்.போதனா வைததியசாலையை வந்தடைநது. (ச)

## சுகாதார ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர்

(சுதுமலை)

சுகாதார சேவை ஊழியர்களுக்கு இவ்வருடம் முதல் அமுல் படுத்தப்பட்ட சம்பள அதிகரிப்பு வழங்கப்படாததைக் கண்டித்து சுகாதார தொழில் சங்கக் கூட்டமைப்பு நாளையும், நாளை மறுதினமும் பகிஷ்கரிப்புப் போரட்டத்தில் ஈடுபடவுள்ளது.

இப் போராட்டம் யாழ்.மாவட்டக் கிளையினாலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு அமைவாக யாழ்.மாவட்டத்தில் கடமைபுரியும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊத்தியோகத்தர்களில் மேற்படி சம்பள அதிகரிப்பைப் பெறாத பதிவு வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குடும்ப சுகாதார சேவை உத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மல்வத்த பீடாதிபதி நேற்றுக் காலமானார்



(கொழும்பு)

இலங்கையின் பௌத்த மத பீடங்களில் ஒன்றான மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய ரம்புக்வெல ஸ்ரீ விபசி தேரர் தனது 89வது வயதில் நேற்றுக் காலமானார்.

கடந்த மூன்று நாட்களாக கண்டி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டி

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை அடிமனத்தில் கொண்ட பலர் இனவாதத்திற்கு அடிமையாகி விட்டனர்

## முன்னாள் அமைச்சர் ரி.பி.தேவராஜ்

(கொழும்பு)

இலங்கை சுதந்திரம் அடைந்த நாள்முதல் இனவாதத் தன்மை யான அரசியலே நெறிப்படுத் தப்பட்டு வருகின்றது. இதனை நீக்கினாலே சமாதானத்தை உருவாக்க முடியும்.

இடைக்கால நிர்வாகம் மிகப் பயங்கரமானது,ஆபத்தானது, தன்னாட்சிக்கே ஒரு சவாலாக அமையும் என மக்கள் மத்தியில் தேர்தல் பிரசாரம் செய்யப்பட்டது.அரச அதிகாரத்திற்கு யார் வருவது? எவ்வாறான தந்திரோபாயங்கள்,கருத்துக்களை முன் வைத்து அரச அதிகாரத்தைப் பின்பற்றலாம்? போன்ற கருத்துக்கள் இனப்பிரச்சினைத் தீர்விற்கு இடையூறாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சரும் இந்திய வம்சாவழி மக்கள் பேரவைத் தலைவருமான ரி.பி.தேவராஜ்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப் பட்டுவரும் "விடியும் வேளை" நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் அரசிற்கும் இடையில போர்நிறுத்தம் ஏற்பட்டு நாட்டில் ஓர் சுமுகமானநிலை ஏற்பட்டமை அனைவராலும் வரவேற்கப்பட்டது.

அவ்வப்போது,சிறுசிறு துப்பாக்கி மோதல்கள் ஏற்பட்ட போதும் நாட்டில் ஓர் சுமுகமான நிலை காணப்பட்டு வருகின்றது.

இதன்பின் பல்வேறு கட்டங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, நாட்டில சிறந்த ஆட்சிக்கு எவ்வாறான நிர்வாக அமைப்புத் தேவை .இந் நிர்வாக அமைப்பு இதுவரை செவ்வனே செயற்பட்டதா? இதனை எவ்வாறு சிறந்ததாக உருவாக்கலாம்? போன்ற கேள்விகள் எழுப்பப்பட்ட போது, அரசு சார்பாக பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்றவர்கள் இது தொடர்பில் புலிகளின கருத்தை நாடிநின்றனர்.

இடைக்கால நிர்வாகம் பற்றி கருத்து வேறுபாடுகள் இருந்தால் கூட,இதனை மையமாக வைத்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தலாமே என்ற கருத்து ஏக மனதாக வெளியிடப்பட்டது.

### சமாதான முயற்சி

சமாதான முயற்சி என்பது தொடர்ந்து பேணப்பட வேண்டிய ஒன்று. இதற்கு இடையில் முடிவு கட்டி விலகிவிட முடியாது. ஆதலால் நாட்டில் சமாதான பேச்சுவார்த்தை அவசியம்.

வெளிநாடுகள் தமது உதவிகளை வழங்க வேண்டுமெனில நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும்.

பிரச்சினைகள் எங்கிருந்து தோன்றினவோ அங்கேயே தீர்க்கப்படவேண்டும். இப்போரின் தாக்கத்தை வடக்கு-கிழக்கு மக்களே பெரிதும் அனுபவித்து வருகின்றனர். மக்களிற்காகவே ஆட்சி நடைபெறுகின்றது.

### இனவாத அரசியல்

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் இனவாதத் தன்மையான ஓர் அரசியலையே அரசியல் தலைவர்கள் நெறிப்படுத்தி வருகின்றனர். சமாதானம் வேண்டும், சமாதானத்தை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தலைவர்கள் கூட இந்த இனவாதத்திற்கு அடிமையாகியுள்ளனர்.

இதனால்தான் தமிழீழ விடுதலைப்புலிகளை சமாதானத்தின் முக்கிய பிரதிநிதிகளாக ஆக்கியுள்ளோம் எனக் கதிர்காமர் கூட அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நாட்டில் சகல இன மககளும்,தாம் உதாசீனப்படுத்தப்படவில்லை. தங்களுடைய நிலைப்பாடுகளும் உறுதிகளும் பாதுகாக்கப்படுகின்றன. இந்த நாடு தங்களிற்கு சொந்தம் என்ற உணர்வு பெறக்கூடிய வகையில் நாம் புதிய கட்டமைப்புகளை ஏற்படுத்துவது அவசியம்.

இதனை மையமாக வைத்து பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வடகிழக்கு தமிழர்களின் தாயகம்.அங்கு நாங்கள் நீண்ட காலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இங்கு பொருளாதாரம சிறப்பாக அமையவேண்டும் எனத் தெரிவித்தார்.

### சம உரிமை அனைவருக்குமுண்டு

இலங்கையில் முஸ்லிம்கள்,இந்திய வம்சாவழி மக்கள் மற்றும் தமிழ்மக்கள் ஆகியோர் குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழ்ந்து வாழ்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரிற்கும் உரிமை உண்டு. அவர்களிற்கான உரிமைச்சாசனங்கள் வேண்டும். இம்மக்களிற்கு தமது பண்பாடு-கலாசாரத் தையும் மொழியையும் பேணி வாழவேண்டிய ஓர் நிலைவேணடும்.

மக்களின் பங்களிப்பு சரியான முறையில் காணப்படவில்லை. தமது தேவைகளை மக்களே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசியற் தலைவர்களுக்கும் தெரிவிக்கவேண்டும்.மக்களின் அமைப்பொன்றை உருவாக்கி அரச அமைப்பதற்கும் மக்களிற்குமான தொடர்பை அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (உ-10)

## சிறுவிளம்பரம்


### எங்கள் நாடு

பரிசு பெற்ற இலங்கை வானொலி நாடகங்களைக் கொண்ட, பரிசுகள் பல பெற்ற நூல். 365 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் ஆராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. வாங்கிப் படியுங்கள! நடியுங்கள்! ரூபா75/=

(8554)

### மணமக்கள் தேவை

டாக்டர்,எஞ்ஜினியர், எக்கவுண்டர்,அரசஉயர் பதவி வகிக்கும்;மற்றும் வெளிநாட்டு இந்து வேளாளர், R.C கிறிஸ்தவ மணமக்களுக்கு தகுந்த வரன் தேவை. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம்.

ஸ்ரீ வைகுந்த ஆச்சிரமம் 68/15 சட்டநாதர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.தொ.பே.இல-077-6528641

தகவல்:-அமைப்பாளர் திரு S.K.சிவகன்

(8556)


## தமிழீழ விளையாட்டுத்துறை ஏற்பாட்டில்

# விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவிக்க 9 ஜேர்மன் நாட்டவர் யாழ்.வருகின்றனர்

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்ட வீர,வீராங்கனைகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி அவர்களை சர்வதேச போட்டிகளில் பங்குபற்ற வைக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் தமிழீழ விளையாட்டுத் துறை ஈடுபட்டுள்ளது.

இந்தவகையில், வெளிநாடுகளைச் சேர்ந்த விளையாட்டில் துறைபோனவர்கள் இங்கு வந்து பயிற்சியளிப்பதற்கான ஏற்பாடுகளும் செயற்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக நாளை புதன்கிழமை ஜேர்மன் நாட்டு விளையாட்டுப் பயிற்சியாளர்கள் 9 பேர் யாழ்.குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்களில் 6ஆண்களும் 3பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் அன்றைய தினம் ஊர்காவற்றுறையில் உதைபந்தாட்டப் பயிற்சியையும் யாழ்.வை.எம். சி.ஏ.மண்டபத்தில் மேசைப பந்தாட்ட பயிற்சிகளையும் வழங்வுள்ளனர்.

இந்த முயற்சியானது விரைவில் வவுனியா, மட்டக்களப்பு திருமலை உள்ளிட்ட தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார். (உ-43)

# கூட்டமைப்பு பாராளுமன்றக் குழு ஒகஸ்ட்டில் இந்தியா செல்கிறது

(மட்டக்களப்பு)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இந்திய அரசுக்கு தெளிபடுத்தும் முகமாக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு இந்தியா செல்லவுள்ளது.

இந்த விஜயமானது எதிர் வரும் ஒகஸ்ட் மாத இறுதியில் இடம்பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின பாராளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வுக்கு இந்தியாவின் ஆதரவு அவசியமென்பது குறித்து, வன்னியில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது ஆராயபபட்டதாக அறியப்படுகின்றது.

இதற்கமையவே இந்த விஜயம் இடம்பெறவிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

(உ-10)

## புத்தளம் பகுதியிலுள்ள

# சமுர்த்தி தாய்ச்சங்கத்தில் தமிழ் மொழி புறக்கணிப்பு

(புத்தளம்)

புத்தளம் பிரதேச செயலகத்தில் இயங்கி வருகின்ற சமுர்த்தி தாய்ச் சங்கத்திலிருந்து, வலய மட்டத்தில் பணி யாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற கடிதங்கள் தனிச் சிங்களத்தில் இருப்பது குறித்து தமிழ்பேசும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள், பிரதேச செயலாளர் ஏ.சீ.எம்.நபீலின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

புத்தளம், வண்ணாத்துவில்லு, கற்பிட்டி மற்றும் முந்தல் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தமிழ்மொழியினை அரசகரும மொழியாக வர்த்தமானி மூலமாக ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்ததும், தமிழ்மொழி உரிய முறையில் அமுல்படுத்தப் படாமை குறித்து உரியகவனம் செலுத்துமாறு பிரதேச செயளாலரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(15)

# பாடசாலைச் சுகாதார மன்றங்கள் செயற்படும்

(சுதுமலை)

பாடசாலைச் சுகாதார மன்றங்களை குறைந்தது மாதத்தில் ஒரு தடவையாவது செயற்படுத்துமாறு சகல பாடசாலை அதிபர்களையும் கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.


இலங்கையில் பல மாவட்டங்களிலும் டெங்குச் காய்ச்சல் பரவ வருவதனால், பலவித தாக்கங்களை மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனால் மரணடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொரு பாடசாலையும் தமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், வெளிகள சுகாதார உத்தியோகத்தர்கள் போன்றோருடன் தொடர்பு கொண்டு மாணவர்கள் மத்தியில இந் நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

இக்கடிதங்கள் பொதுப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைத் தவிர்த்து, மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பூரண பங்களிப்பைப் பெற்று செயற்படவேண்டும் எனவும் இது பற்றிய சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-252)

உலக சுற்றுச் சூழல் தினம் ஜுன் -05



World Environment Day- June-05

## எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

**கடந்த பத்தாண்டுகளில் ஆண்டு தோறும் சராசரியாக 600,000 பீப்பாய்கள் எண்ணெய் கப்பல் விபத்துக்களின் மூலம் கடலில் சேர்ந்துள்ளது. இது 2002 ஆம் ஆண்டில் 'பிறிஸ்ரிக்' எண்ணெய் தாங்கிக் கப்பல் மூழ்கியதால் கடலில் கலந்த எண்ணெய்யின் அளவைப் போலப் 12 மடங்குகள் ஆகும்.**

# பிரெஞ்சு பகிரங்க டெனிஸ்

# காஸ்டன் கோடியோவுக்கு இறுதியாட்டத்தில் வெற்றி



நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆண்களுக்கான பிரெஞ்சு பகிரங்க டெனிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் மிகவும் எதிர்பார்க் கபபட்ட கில்லமோ கொரியாவைத் தோற்கடித்து காஸ்டன் கோடியோ வெற்றிவாகை சூடினார்.

முதலிரண்டு செற்றுக்களையும் மிக லாவகமாக வெற்றி கொண்ட கொரியா, அதன்பின்னர் தசைப்பிடிப்புக்குள்ளாகி நடக்க முடியாது அவதிப்பட்டார். பின்னர் நெற்றுக்கு மிக அருகில்நின்று விளையாடி அடுத்த இரண்டு செற்றுக்களிலும் தோல்விய டைந்தார்.

இறுதிச் செற்றில் மிக உக்கிரமாக மீண்டும் மோதிய கொரியா, காஸ்டன் கோடியோவிடம் தோல்விகண்டார்.

வெற்றிக் கேடயத்தை முந்நாள் பிரெஞ்சு ஓபன டெனிஸ் சம்பியனான தனது நாட்டு வீரர் கில்லமோ விலாஸிடமிருந்து பெற்றார். இவ்விருவரும் ஒன்றாகவே பயிற்சி செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உதைபந்தாட்டத்தில் பெயரெடுத்த ஆர்ஜென்ரீனர்கள் டெனிஸிலும் பெயர் எடுத்ததையிட்டு அந்நாடு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

(யே)

# நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயவிளையாட்டு விழா

யாழ்.நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை கல்லூரி மைதானத்தல் வெகு சிறப்பாக நடைபெற்றது. நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் திரு ச.சத்தியவரசன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவின் பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, பணபாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் கௌரவ ஆர்.தியாகலிங்கம் கலந்துகொண்டு சிறப்பித்தார்.


இப் போட்டியில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கு திருமதி கேமந்தராணி தியாகலிங்கம் பரிசில்களையும், வெற்றிக் கேடயங்களையும் வழங்கி கௌரவித்தார். மேலும் சிறப்பு விருந்தினராக தீவகவலையக் கல்விப் பணப்பாளர் உயர்திரு பொ.வேணு கோபால வாணிதாசனும் கௌரவ விருந்தினராக நெடுந்தீவு கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு அருணன் அவர்களும் மற்றும் வலய கல்விப் பணிமனை, கோட்டக் கல்விப் பணிமனை அதிகாரிகளும், நெடுந்தீவு பாடசாலை அதிபர்கள், ஆசிரியாகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்குகிழக்கு மாகாண கல்வி பணபாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை செயலாளருக்கு அவரின் வருகையின் பொருட்டு நெடுந்தீவில் பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக நெடுந்தீவு பாடசாலை களுக்கு நேரடியாக விஜயம மேற்கொண்டு, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்த செயலாளர் அவர்கள், நெடுந்தீவின் ஆசிரியர் பற்றாக்குறையினை போக்கும வகையில் ஆசிரியர் நியமனங்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன், நெடுந்தீவு பாடசாலைகளுக்கு தேவையான பௌதீக வளங்களைப பெற்றுத்தருவதிலும் தான் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.(யே-68)

# இங்கிலாந்து உதைபந்து அணி மஞ்சள் அட்டையுடன்

## பயிற்றுவிப்பாளர் எரிக்சன்



எதிர்வரும் யூரோக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இங்கிலாந்து உதைபந்து அணி ரசிகர்கள் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளாவிட்டால் இங்கிலாந்து அணி அத்தொடரிலிருந்து வெளியேற்றப்படும் ஆபத்து உருவாகியுள்ளதாக அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் செவன் கோரான் எரிக்சன் எச்சரித்துள்ளார்.


ரசிகர்களின் மட்டரகமான நடத்தை காரணமாக யூபாக் கிண்ணப் போட்டிகளின்போது இங்கிலாந்து அணிக்கு மஞ்சள அட்டைகாட்டப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ள நிலையில் யு,ரோக்கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்து ரசிகர்கள தரமாக நடந்துகெள்ளாது போனால் அவ்வணிக்கு ஆபத்துக் காத்திருக்கிறது.

ரசிகர்களுக்கு எம்மீது இருக்கும் அன்பை நாம் பெரிதும் மதிக்கிறோம். ஆனால் அது எம்மை ஆபத்தில் கொணடு போய் விடுமானால் அதை அனுமதிக்கமுடியாது. உண்மையில் ரசிகர்களின் பலத்தில் தான் நாம் புகழடைகிறோம். அதே வேளை அவர்கள் கணணியமாக நடக்கவேண்டியதும் .அவசியம் என்றார் எரிக்சன்.

(யே)

# அமெரிக்க தேசிய கூடைப்பந்து வெற்றிக் கிண்ணம் யாருக்கு?

நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ள அமெரிக்காவின் இறுதிக் கூடைப்பந்து கிண்ணப் போட்டிகளில் வெற்றி பெறப் போவது லா லேக்கர்ஸ் அணியா அல்லது பிஸ்டன் அணியா எனும் கேள்வி பலரிடமும் எழுந்துள்ளது.



பொதுவாகக் கடந்த ஐந்து வருடங்களில் நான்காவது தடவையாக லேக்கர்ஸ் அணியே இம்முறையும் வெற்றி பெறும என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பயிற்சிப்பற்றாக்குறை முக்கிய வீரர்களின் காயம், பாலியல் குற்றச்சாட்டுக்கள போன்ற பல பிரச்சினைகளில் சிக்கித்தவித்த லா லேக்கர்ஸ் அணி அவற்றையெல்லாம் தாண்டி இறுதிப் போட்டித் தொடரில் நுழைந்துள்ளது. இம்முறை மிக லாவகமாக இவ்வணி வெற்றிபெறும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

1988லிருந்து தேசிய கூடைப்பந்தாட்டத்தில் வெற்றிகளைப் பெற்றிராத பிஸ்டன் அணியின் பின்வரிசை மிக உறுதியாக இருக்கிறபோதும் முன்வரிசை பலவீனமானது என்று அறிவிக்கப்படுகிறது.

(யே)

# விளையாட்டுச் செய்திகள்

## மே.இந்திய அணி 559—4 பங்களாதேஷ் அணி 66—3

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெற் சுறறுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும் மேற்கிந்திய அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணி பலம் வாய்ந்த நிலையை அடைந்துள்ளது.



ஜமேக்காவில் சபீனா பார்க விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் இப் போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவின்போது பங்களாதேஷ் அணியினர் தமது இரண்டாவது இன்னிங்சில் 3விக்கெற் இழப்பிற்கு 66ஓட்டங்களைப் . பெற்றிருந்தனர். இப். போட்டியில் பங்களாதேஷ் அணியினர் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு மேலும் 209ஓட்டங்களைப்பெற வேண்டிய இக்கட்டானநிலையில் இருக்கின்றனர்.

முன்னதாக தனது முதலாவது இன்னிங்ஸின் துடுப்பாட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியினர் சர்வானின் இரட்டைசதம் மற்றும் லாரா, சந்தர்ப்போல் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் மிக வலுவான நிலையை அடைந்திருந்தனர். முதலாவது இன்னிங்ஸில் 4விக்கெற் இழப்பிற்கு 559ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தமது ஆட்டத்தை நிறுததிக் கொண்டனர். இதில் ராம்நரேஷ் சர்வான் ஆட்டமிழக்காமல் 261ஓட்டங்களையும், பிறையன்லாரா 119ஓட்டங்களையும், சிவ் நாரின் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர்.

(யே-68)

# ஒலிம்பிக் வரலாறு ①

## 1896 எதென்ஸ் நகரில் இடம்பெற்ற முதல் ஒலிம்பிக்

முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத்தின் தலை நகரமான எதென்ஸில் 1896ம் ஆண்டு நடைபெற்றன. பரன் டி கியூபேட்டின் என்பவரே இப்போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கினார்.



நவீன ஒலிம்பிக்கின் தந்தை பரன் டி கியு,பேட்டின்

1900ஆம் ஆண்டில் முதலாவது ஒலிம்பிக் போட்டியை பரிஸல் நடாத்துவதற்குப் பிரான்ஸ் திட்டமிட்டது. ஆயினும் நான்கு ஆண்டுகள் முன்னதாக எதென்ஸ் இப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டது.

மிகுந்த நிதி நெருக்கடியில் கிரேக்கநாடு சிக்கித்தவித்தமையால் தனது நாட்டின் நூற்றாணடு விழாவுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த ஹங்கேரி நாடு புடாபெஸ்டில் இப போட்டிகளை நடத்த முன்வந்தது. ஆயினும் கிரேக்கத்தின் முடிக்குரிய இளவரசர் கொன்ஸ்ரன்ரைன் போட்டி ஏற்பாட்டுக்குழு ஒன்றை நியமித்தார். அதனைத் தொடர்ந்து ஏராளமான பணம் நன்கொடையாக வந்து குவிந்தது.

14நாடுகளைச் சேர்ந்த 200 ஆண்கள் 43நிகழ்வுகளில் கலந்து கொணடனர். இவர்களில் பெரும்பாலானவாகள் கிரேக்கத்தைச் சேர்ந்தவர்கள். ரெனிஸ் மெய்வல்லுநர், பாரமதூக்குதல், சைக்கிள் ஓட்டம், மல்யுத்தம், துப்பாக்கிச்சூடு, நீச்சல், உடற்சாகாசம் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. கிரிக்கெற், உதைபந்தாட்டம் என்பன போதிய அணிகள் இன்மையால் கைவிடப்பபட்டன. படகுப் போடடிகள் காலநிலை சீரின்மையால் பாதிக்கப்பட்டன.

சமபியன்களுக்கு வெள்ளிப்பதக்கமும் சான்றிதழும் ஒலிவ் இலையிலான கிரீடமும் வழங்கப்பட்டது. இரண்டாவது வந்தோருக்கு செப்புப்பதக்கமும் மலர்க்கிரீடமும் வழங்கப்பட்டது. மூன்றாவது நபர் வெறுங்கையோடு வீடுதிரும்பினார்.

முதலாவது ஒலிம்பிக் வெற்றியாளர் அமெரிக்க முப்பாய்ச்சல் வீரர் பிரென்டன் கொனொலி ஆவார். 13.71மீற்றர் தூரம் அவர் பாய்ந்தார். மரதன் போட்டியில் கிரேக்க வீரர் ஸ்பைரிடோன் லூயிஸ் இரண்டாவது பெற்றியாளரைவிட 7நிமிடங்கள் முன்னணியில் வந்தார்.

கிரேக்கர்களின் ஆர்வத்தால் இப்போட்டி வெற்றிகரமாக நடந்தேறியது.

(யே)

# காவிரிப் பிரச்சினை தொடர்பாக பிரதமரை சந்திக்க முடிவு

## 40 எம்.பி.கள் புதுடில்லி செல்கிறார்கள்

(சென்னை)

சென்னையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனநாயக முற்போக்கு முன்னணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் காவிரிப் பிரச்சினை தொடர்பாக தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரைச் சந்திப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி இன்று காலை 10 மணியளவில் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கவுள்ளனர்.

இதில் அ.தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டு தமிழக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதைத் தொடர்ந்து வரும் 10 ஆம் திகதியன்று பெங்களூரில் கர்நாடக முதலமைச்சர் தரண் சிங்கை ஜனநாயக முற்போக்குக் கட்சித் தலைவர்கள் சந்திக்கிறார்கள்.

இந் நிலையில் பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக முதலமைச்சர் தரண் சிங் காவிரிப் பிரச்சினை குறித்து முதன்மைச் செயலாளருடன் விவாதித்ததாகத் தெரிவித்தார். உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தவிருப்பதாகவும் அவர் கூறினார்.

மத்திய கப்பல்துறை மற்றும் சாலைப்போக்குவரத்து அமைச்சர் ரி.ஆர்.பாலு, தொலைபேசியில் தம்முடன் தொடர்பு கொண்டு ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் தம்மைச் சந்திக்கப் பெங்களூர் வரவிருப்பதாகத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையே, பிரதமரைச் சந்திககவிருக்கும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் மாநிலங்கள் அவை அ.தி.மு.க. எம்.பி.கள் இடம் பெறுவார்கள் என தமிழக நிதியமைச்சர் பொன்னையன் தெரிவித்துள்ளார்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழகத்துக்குரிய பங்கைப் பெறுவதில் முன்பு எப்பொழுதுமில்லாத பொறுப்பு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் இப்பொழுது உள்ளதென அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் விடுத்துள்ள அறிக்கையில், தற்பொழுது மத்தியில் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சியும் கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சியும் இருப்பதனால், காவிரி நீர் உடனடியாகக் கிடைக்க உரியநடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக, தமிழகம், புதுவையைச் சேர்ந்த 40 மக்களவை உறுப்பினர்கள் பிரதமரைச் சந்திக்கவிருப்பதாக ஜனநாயக முற்போக்குக் கூட்டணி தலைவர்கள் முடிவுக்கு மகிழ்ச்சி தெரிவித்த அவர், சென்ற 5 ஆண்டுகளில் காவிரி நீரைப் பெறுவதற்கு கருணாநிதி, ராமதாஸ், வைகோ. ஆகியோர் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார். (து)




# இராமேஸ்வரத்தில் தேர்தல் தகராறு

## வீடு சூறை,வாகனம், படகு தீக்கிரை

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரத்தில் தேர்தல் தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரின் வீடு சூறையாடப்பட்டதுடன், இரண்டு சக்கர வாகனம் மற்றும் படகு ஆகியனவும தீவைத்துக் கொழுத்தப்பட்டுள்ளது.

தி.மு.க.கூட்டணிக் கட்சியினர் கடந்த வாரம் இராமேஸ்வரத்தில் மக்களவைத் தேர்தல் வெற்றியைக் கொண்டாடிய போது அ.தி.மு.க. மற்றும் விஷ்வஹிந்து பரிஸத் அமைப்பினர் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

மேலும் நேற்று முன்தினம் அதிகாலை மார்க்ஸிஸ்ட் கம்யூஸ்ட் கட்சி மாவட்டக் குழு உறுப்பினரான செந்தில் என்பவரது வீட்டை அ.தி.மு.க. மற்றும் விஷ்வஹிந்து பர்ஸத் அமைப்பினர் அடித்து நொருக்கியுள்ளனர்.

மேலும் அவர் வீட்டிலிருந்த இரு சக்கர வாகனமும் தீ வைத்துக் கொழுத்தப்பட்டது.

பின்னர் வாக்குப்பட்டியைச் சேர்ந்த மற்றுமொரு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிக்குச் சொந்தமான படகு தீ வைத்துக் கொழுத்தப்பட்டது.

இந்த இரண்டு சம்பவங்களையும் அடுத்து இராமேஸ்வரத்தில் பதற்றம் நிலவுவதால் கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டுப் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். (து)

# அரசு உதவிக் கல்லூரிகளுக்குக் கட்டுப்பாடு

## ஆங்கிலம், தத்துவவியல் போதனை ரத்து

தமிழ் நாட்டிலுள்ள அரசு உதவி பெறும் கல்லூரிகளில் ஆங்கிலம், தத்துவவியல் போன்ற பட்டவகுப்புகளையும் மொழிப்பாடத் திட்டங்களையும் ரத்து செய்யத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அரசு உதவிபெறும் கல்லூரிகளில் பட்ட வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை 20க்கும் குறைவாகவோ, மொழிப்பாடங்களில் 10க்கும் குறைவாகவோ இருக்கக் கூடாது என்பது அரசு உத்தரவு.

இதன்படி தொடர்ந்து 3 ஆண்டுகளாக மாணவர் சேர்ப்பு இல்லாத காரணத்தால், ஆறு கல்லூரிகளில் பி.ஏ.(ஆங்கிலம்), தத்துவவியல், அரபு போன்ற பட்ட வகுப்புகளை ரத்து செய்ய கல்லூரிக் கல்வி இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், 19 கல்லூரிகளிலுள்ள பிரஞ்ச், சமஸ்கிரதம், ஹிந்தி மொழிப்பாடத் தெரிவுகளை நீக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசின் இந்த நடவடிக்கைக்குக் கல்லூரி ஆசிரியர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்குஇந்தக் கல்வியாண்டு முதல் மாணவர்களைச் சேர்க்கக் கூடாது என்று அரசு உத்தரவிட்டுள்ளது.

மாறாக, மாணவர்களைச் சேர்த்தால் குறிக்கப்பட்ட பாடங்களுக்கு அரசு மானியம் அளிக்கப்பட மாட்டாது எனவும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவித்துள்ளார். (து)

## இந்தியச் செய்திகள்



வேப்பேரி கவின்கலைக் கல்லூரி அருகே உள்ள மேம் பாலத்தில் பழுதடைந்த ஆட்டோவை ஏற்றிச் செல்கிறது மாட்டு வண்டி.

# பொடா சட்டம் விரைவில் ரத்தாகும்

## பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

பொடா சட்டம் நாடாளுன்றத்தின் ஒப்புதல் பெற்று விரைவில் ரத்து செய்யப்படுமென்று பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னை வந்த அவர், விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசும் போது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்த பட்சச் செயல்திட்டத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளபடி பொடா சட்டம் ரத்து செய்யப்படுமென்று கூறினார்.

எனினும் பொடா சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய முடியாது எனக் குறிப்பிட்ட முகர்ஜி, நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற்ற பிறகே இச் சட்டத்தை நீக்கமுடியும் என்றார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது குறித்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் ஆலோசனை நடத்திய பின்னரே அரசு முடிவெடுக்குமென்று முகர்ஜி கூறினார்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் அண்மையில் டில்லி வந்திருந்தபோது இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் குறித்துச் சில யோசனைகள் தெரிவித்ததாகவும், பிரதமரின் பரிசீலனைக்கு அவை எடுத்துச் செல்லப்படுமென்றும் முகர்ஜி மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்குச் சில உதவிகளைச் செய்வதாக இந்தியா உறுதியளித்திருந்த போதிலும் அந்நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் உதவி செய்வதாக எந்த உறுதியும் அளிக்கப்படவில்லையென்றும் அவர் கூறினார். (து)



பெங்களூரில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற பழைய கார்கள் ஊர்வலத்தில் இடம் பெற்ற 1928 ஆம் ஆண்டைச் சேர்ந்த டி.ஈ.எச். வான்செஸ்டர் ஸ்டிரைட் மொடல் கார்.( இந்தக் காரை அப்போது மோதிலால் நேரு வைத்திருந்தார்) பழைய கார்கள் ஊர்வலத்துக்கு கர்நாடக வின்டேஜ் கிளாசிக் கிளப் ஏற்பாடு செய்திருந்தது.

# முன்னாள் ஆந்திர முதல்வர் ராமதாஸ் மகன் கைது

## ஹைதராபாத்தில் பதற்றம்

(ஹைதராபாத்)

பிரபல தெலுங்கு நடிகர் பாலகிருஷ்ணா ஹைதராபாத்திலுள்ள தமது இல்லத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு சுரேஸ் என்ற தெலுங்குப் படத்தயாரிப்பாளரையும் அவரது நண்பரையும் துப்பாக்கியால் சுட்டதால் ஏற்பட்ட சர்ச்சை இன்னமும் ஓயவில்லை.

காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்குப்பின் நெஞ்சுவலி எனக் கூறி மருத்துவமனையில் சேர்ந்த பாலகிருஷ்ணாவை ஆந்திரப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்து நீதிபதி முன் ஆஜர்ப்படுத்தினர்.

அப்போது அவர் நீதிபதியிடம் அளித்த வாக்குமூலத்தில் படத் தயாரிப்பாளர் சுரேஸ் தம்மைக் கத்தியால் குத்த முயன்றதால் தான் துப்பாக்கியால் சுட நேர்ந்ததாகப் பாலகிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இதனைச் செய்தியாளர்களிடம் தெரிவித்த ஹைதராபாத் பொலிஸ் அதிகாரி ஆர்.கே.சிங், பாலகிருஷ்ணாவின் வாக்கு மூலம் நம்பத்தக்கதாக இல்லையென்று கூறினார்.

இதற்கிடையே தெலுங்கு திரைப்படப் பிரமுகர்கள் சிலர் இவ்விவகாரத்தில் சமரசம் காண முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இருப்பினும் பாலகிருஷ்ணா கைது செய்யப்பட்டிருப்பதால் ஏற்பட்ட பதற்றமும் பரபரப்பும் ஹைதராபாத்தில இன்னமும் ஓயவில்லை.

கைது செய்யப்பட்ட பாலகிருஷ்ணா பிரபல தெலுங்கு - தமிழ் திரைப்பட நடிகரும், தெலுங்கு தேசம் கட்சித் தலைவரும், முன்னாள் ஆந்திர முதலமைச்சருமான காலஞ்சென்ற என்.டி.ராமராவின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## இன்று ஒரு தகவல்

# ஹலோ(Hello)

"ஹலோ (Hello) எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டார் ஒருவர். "நேரில் தானே விசாரிக்கிறீர்கள்? பிறகேன் ஹலோ என்று டெலிபோனில் கூப்பிடுவது போல் கூப்பிடு கறீர்கள்?"என்றார் அவர். "என்ன செய்வது சார்! பழகி விட்டது" என்றார் இவர்.

இந்த ஹலோ எனற வார்த்தை இன்று உலகம் முழுவதிலும் உபயோகத்தில் இருக்கிறது. தொலைபேசி யைக் கையில் எடுத்த வுடன் நாம் கூறும் முதல் வார்த்தை ஹலோ தான். இந்த வார்த்தை எப்படி ஆரம்பமாகி யிருக்கும்? இதைப் பறறி ஆராய்ச்சி செய்தார் நியூயோர்க் நகரப் பேராசிரியர் ஒருவர்.

கி.பி 1340 ஆம் ஆண்டிலேயே இந்த சொல் பழக்கத்திலி ருந்ததாம்.ஆனால் தொலைபேசியைக் கண்டு பிடித்த பின்பு தானாம் இப்போதுள்ள அர்த்தத்தில் அந்த வார்த்தை உப யோகப்படுகிறதாம்.

ஒரு காலத்தில் தொலைபேசி இணைப்பாளர்களாகப பணி புரிந்த பெண்களுக்கு HelloGirls என்றே பெயர் இருந்த தாம்! 1876இல் அலெக்சாண்டர் கிரஹம்பெல் தொலை பேசியைக் கண்டுபிடித்தபோதே கூறினராம். எனது இந்தக் கருவியைப் பயன்படுத்துபவர்கள் அஹோய் (Ahoy) என்று கூப்பிட்டு அதன் பின்பு பேச ஆரம்பிக்கலாம என்றா ராம்.

அதன்பிறகு ஒருவருடம் கழித்து 1877இல் அமெரிக்காவின் 'கனெக்டிகட்' நகரத்தில் முதலாவது தொலைபேசி இணைப் பகம் திறக்கப்பட்டது. அப்போது தோமஸ் அல்வா எடிசன் தனது நண்பருக்கு எழுதிய கடிதத்தில் தொலைபேசி உரை யாடலை ஆரம்பிக்க ஹலோ என்ற சொல் தான் மிகவும் அழ காக இருக்கும் என்று எழுதி னாராம்.

அதன்பின் நியூஹெவன் (New Heaven) எனற இடத்தில் இன்னுமோர் நிலையம் திறக்கப்பட்டது. அப்போது பலபேர் ஹலோ என்று கூப்பிட ஆரம்பித்தார்களாம் சிலபேர் அஹோய் என்றும் கூப்பிட ஆரம்பிததார்களாம். சில காலத் தின் பின்பு அஹோய் என்ற வார்த்தை மறைந்து விட்டது.

அலெக்சாண்டர் கிரஹம்பெல் பிரிட்டனின் ஸ்கொடலாந்து வட்டாரத்தைச் சேர்ந்தவர். அங்கே ஒருவரை இன்னொருவர் அழைக்க அஹோய் என்ற சொல்லைப் பயன்படுத்துவார் களாம்.'அஹோய் வாரும்பிள்ளாய்' என்கிற சொற்றொடர் பழைய தமிழ் உரைநடை நூல்களில் உண்டு.

முதலில் தொலைபேசி நிலையம் கனெக்டிகட் நகரில திறந்தார்களல்லவா? அப்போது தொலைபேசி இணைப பாளர்கள எப்படிப் பேசவேண்டும் என்பதை விளக்க ஒருகையேடு வெளியிட்டார்களாம். அதில்ஒரு யோசனை சொல்லிப் பார்த் தார்களாம். உங்களுக்கு என்னவேண்டும்? What is wanted? என்று கூறி பேசசை ஆரம்பிக்கலாம் என்பது அவர்களின் யோசனை அதுவும் நீண்டகாலத்திற்கு நீடிக்க வில்லை. கடையில் ஹலோ தான் எங்கும் உபயோகப்பட ஆரம்பித்தது.

1883 ஆம் ஆண்டில் தான் முதல் முறையாகத் தொலை பேசியில ஹலோ என்ற வார்த்தை ஒலித்தது என்று ஆக்ஸ்.'. போர்ட் ஆங்கிலப் பேரகராதி கூறுகிறதாம். ஆனாலும் அதற்கு முன்பே 1880 ஆம் ஆண்டில் நாவலா சிரியர் மார்க்டவைன் இதைப் பயன்படுத்தியுள்ளாராம். புருக்ளின் கல்லூரிப் பேராசிரியர் அலன் கோணிஸ்பேர்க் இவ்வளவு விபரத் தையும் கூறியுள்ளார். அமெரிக்கத் தந்தி தொலைபேசி நிறுவனத்தின் ஆவணங்களை 5வருட காலமாக ஆராய்ச்சி செய்து பார்த்துவிட்டு இவற்றைக் கூறியுள்ளார்.

தொலைபேசி என்பது எப்பேர்ப்பட்ட கண்டுபிடிப்பு. ஆனால தொலைபேசி மூலம் ஆட்களைப் பிடிப்பது தான் இந்தக் காலத்தில் மிகவும் கஸ்டமானது.

ஒரு வட்டுக்குப் .'.போன் வந்தது.சிறு பையன் ஒருவன் ஓடிப போய் எடுத்தான். போன் செய்தவர் "தம்பி உன் அப்பா வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டார். தொடர்பில் இருங்கள் அவர் வீட்டில இருக்கிறாரா? இல்லையா எனபதை அவரிடம் கேட்டுச் சொல்கிறேன்" ஏன்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## வான்-லொறி விபத்தில் இருவர் பலி; ஒருவர் காயம்

(புத்தளம்)

தனியார் வானொன்று லொறியொன்றுடன் மோதுண்டதில் வானில் பயணம் செய்த மூவரில் இருவர் பலியானதுடன், ஒருவர் காயங் களுக்குள்ளான நிலையில் இராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இவ் வான்,ஜாஎலப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கனரக லொறியுடன் மோதுண்டதில் வாகனத்தில் பயணம் செய்த கணவனும், மனைவியும் ஸ்தலத்திலேயே கொல்லப்படடதுடன் அவர்களது 14 வயது மகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில், புத்தளத்தைச் சேர்ந்த எம்.எச். பாருக்(வயது58),சித்தி ரபீக்கா (வயது46) ஆகியோரே மரணமானவர்களாவர்.ஜாஎலப் பொலிஸார் இது குறித்த விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தில் பலியான பாருக், புத்தளம் வன இலாகா பணிப்பாளர் என்பகு குறிப்பிடக்ககககு. (சு-15)

# போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான வேலைத்திட்டம் பாடசாலைகளில் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளி நொச்சி இணைப்பு அலுவலகத்தினால் 'சிறுவர் நலத் திட்டம்" ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் யாழ். குடாநாட்டிலுள்ள அனைத் துப் பாடசாலைகளிலும் நேற்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரையிலான காலப் பகுதியை சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு வாரமாகக் கடைப் பிடிக்கபட்டு வருகிறது.

இத்திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத் துவதற்கென் யாழ்ப்பாணம், வலிகாமம்,தென்மராட்சி,' வடமராட்சி மற்றும் தீவகம் ஆகிய கல்வி வலயங் களில் அந்ததந்த வலயக்கல்விப் பணிப்பாளர்களின் தலைமையில் கோட்டக்கல்வி அதிகாரிகள் மற்றும் முதன்மை ஆசிரியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தந்தக் குழுவிலிருந்து தலா ஒரு முதன்மை ஆசிரியர் இணைப் பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைவாக யாழ்ப்பாண கல்வி வலயத் திற்கு கு.குலசேகரமும்,வலிகாமம் கல்வி வலயத்திற்கு எஸ்.இராசவரோதயமும், தென்மராட்சி கல்வி வலயத் திற்கு ந.பாக்கியநாதனும், வடமராட்சி கல்வி வல யத்தற்கு க. தில்லைநாதனும் தீவகக் கலவி வல யத்திற்கு த. தர்மராஜனும் இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி குழுவினர், சிறுவர் உரிமைகள் விழிப் புணர்வு வாரத்தில் சிறுவர் உரிமை மீறல் மற்றும சிறுவர் உரிமைகள் தொடர்பான செய்திகளையும் கருத்துக்களையுமவிரிவாக விளக்கிக் கூறுவார்கள் அத்துடன் ஐ.நா.சிறுவர் சமவாயத்தால் வெளியிடப் பட்ட சிறுவர் உரிமைகள் பற்றிய சிறிய கையேடு ஒன்றும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்கப் படவுள்ளது.

இவ் வேலைத்திட்டத்தின் அடுத்த கட்டமாகப் பாடசாலை மாணவர்களிடையே சிறுவர் உரிமைகள், உரிமை மீறல் பற்றிய விடயங்களை உள்ளடக் கியதான 'கருத்து வெளிப்பாடு'ப் போட்டிகளும் நடத் தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

# எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் நடைமுறைகள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத்தேர்தலில் வாக் கெடுப்பு நடாத்துவது குறித்து தேர்தல் ஆணை யாளர் தயானந்த திஸநாயக்க சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார்.

தேர்தல் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை காலை இடம்பெற்ற சந்திப்பில் மேல்மாகாண சபை, மத்திய மகாணசபை, தென்மாகாணசபை,வடமத்திய மாகாணசபை மற்றும் ஊவாமாகாணசபை ஆகியவற்றில உள்ள மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகள், உதவித தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அடுத்த மாதம் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் வாக்கெடுப்பு நடாததுவது குறித்து முக்கிய பல விடயங்கள் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டன.

சுதந்திரமாகவும்,நேர்மையாகவும் வாக்கெடுப்பை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து முன்னதாகவே தயார்படுத்திக்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் மாவட்டத் தெரிவத்தாட்சி அதி காரிகளிடமும் உதவித் தேர்தல் ஆணையாளர்களி டமும் கேட்டுக்கொண்டார்.

பெரிய அளவிலான பதாதைகள் மற்றும் சுவ ரொட்டிகள் ஆகியன பொது இடங்களில் காட்சிக்கு வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே இவை கள் அமைக்கப்பட்டிருந்தால் இவற்றை அகற்று வதற்குப் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கை களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் களிடம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இந்தத் தடவை மாகாணசபைத் தேர்தலின் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு வெளி நாட்டுக் கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படவில்லை. இருந்தபோதிலும், உள் நாட்டுக் கண்காணிப்பாளர்களே இப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

தபால் மூல வாக்கெடுப்புக்களை நடாத்துவதற்கான பணிகளில் ஈடுபடுத்தப்படவிருக்கும் உத்தியோகத்தர் களைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்வது சம்பந் தமாகவும் வாகனவசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது சம்பந்தமாகவும் இச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது. (121)

## இராசி பலன்

**08.06.2004**

**(வைகாசி 26,செவ்வாய்க்கிழமை)**

**சஷ்டி மு.இ.9.17 வரை**

**அவிட்டம் மு.இ. 10.12வரை**

**இராகுகாலம் 2.52-4.22 மணிவரை**

**சுபநேரம் 10.22-11.52 மணிவரை**

**மேடம்**

எடுத்த காரியம் கைகூடும், பெருமையடை தல, குடும்பநலம்,புதியபொருள் சேர்க்கை.

**இடபம்**

உஷ்ணநிலை, உற்சாகம்,செய்தொழில் முன்னேற்றம்,முயற்சி கைகூடும்.

**மிதுனம்**

சரீரப்பிரயாசை, தேசாந்திரவாசம், காரிய தாமதம்,எதிர்பாராத செலவு.

**கடகம்**

எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு, தொழில் நன்மை.

**சிங்கம்**

களஸ்திரநன்மை,அபூர்வசந்திப்பு,முயற்சி கைகூடும், போஷன நன்மை.

**கன்னி**

சுவாரஸ்யம், பிறர்உதவி, தொழில் நன்மை, நல்ல காரியம்.

**துலாம்**

தாழ்ந்த சுபாவம், எதிர்பாராத நன்மை, குடும்பக் கவலை, காரியதாமதம்.

**விருச்சிகம்**

மாதாசுகம், ரோகநிலை, காரியதாமதம், அமைதிக்குறைவு.

**தனுசு**

உறவினர் சந்திப்பு, நல்லகாரியம், செய் தொழில் நன்மை, ஜனவசியம்.

**மகரம்**

அதிகவார்த்தை, வீண்செலவு,காரிய தாமதம், தொழில் கஷ்டம்.

**கும்பம்**

தெய்வசிந்தை, சென்ற இடத்தில் செல் வாக்கு, பொருள்சேர்க்கை, போஷன சுகம்.

**மீனம்**

அமைதிக்குறைவு,சுபசெலவு, தொழிலில் ஆர்வம், முயற்சி தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

## தமிழ் இளைஞர்கள் கைது குறித்து மலையக மக்கள் முன்னணி கண்டனம்

(கொழும்பு)

புளத்சிங்கள மிலிகந்த தோட்டத்தில் நான்கு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டது தொடர்பாக மலையக மக்கள் முன்னணியினர் சிறிலங்கா காவல் துறை மா அதிபரிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இப்பகுதியில் தமிழ் குடியிருப்பா ளர்கள் மீது சிங்களக் காடையர்கள் மேற்கொண்ட தாக்குதல்களில் 11 பேர் காயமடைந்ததோடு, நூற்றுக கும் மேற்பட்ட வீடுகள் சேதமாக்கப்பட்டன.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட நான்கு பேரையே காவல்துறையினர் கைது செய்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் காவல்துறை மா அதிபரிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அப்பகுதிக்கு நேரில் சென்ற முன்னணியின் தலைவர் சந்திரசேகரனும், சக நாடாளு மன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணனும் நிலைமை களை ஆராய்ந்தபோதே இவ்வாறு பாதிக்கப்பட்ட நான்கு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள் ளது தொடர்பான தகவல் வெளியானது. இதனைய டுத்தே, இதுதொடர்பாக காவல்துறை மா அதிபருடன் தொடர்பு கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர சேகரன் இது தொடர்பாக தமது ஆட்சேபனையை வெளியிட்டார். (10)

## வருடாந்த மஹோற்சவம்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத் துறை அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயத் தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும்,மறுநாள்புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (18)

# தனது நண்பர்களின் நலனுக்காக அமெரிக்கா மீண்டும் செய்யும்

## நினைவு நாள் நிகழ்வில் ஜோர்ஜ் புஷ்



(நோமன்டி- பிரான்ஸ்)

60 ஆண்டுகளுக்கு முன்பாக நாஸிகளின் பிடியிலிருந்து ஐரோப்பாவை மீட்க அமெரிக்கா தலைமை தாங்கியது. நோமன்டி கடற்கரையில் இரண்டாயிரம் அமெரிக்க வீரர்கள் தமது உயிரை இழந்தனர். அவ்வாறான அச்சுறுத்தல்கள் இப்பொழுதும் இருக்கிறது. தனது நண்பர்களுக்காக மீண்டுமொருதடவை அமெரிக்கா அதைச் செய்யும் என்று ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

சுமார் 20 நாடுகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் பிரான்சில் நோமன்டி கடற்கரையில் கலந்து கொண்ட ஞாபகார்த்த நிகழ்வில் உரையாற்றும் போதே புஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை காலமான அமெரிக்க முந்நாள் ஜனாதிபதி ரொனால்ட் றேகனுக்கு மரியாதை செலுத்தியவாறு தனது பேச்சை ஆரம்பித்த புஷ் அமெரிக்க வீரர்களின் தியாகத்தைப் புகழ்ந்து பேசினார். இச்சம்பவத்தில் உயிர் நீத்த கனேடியர்கள் மறக்கப்படுகிறார்கள் எனும் குற்றச் சாட்டை நிவர்த்தக்குமுகமாக கடந்த சனிக்கிழமை இளவரசா சாள்ஸ், அவர்களின் கல்லறைகளுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தார்.

பிரெஞ் ஜனாதிபதி ஜக்சிராக் அமெரிக்காவுக்குப் பிரான்ஸ் எப்பொழுதும் கடமைப்பட்டுள்ளது என்றும் சொன்னார். தொடர்ந்து அமெரிக்காவுடன் பிரான்ஸ் தனது நட்பைப்பேணும் என்றும் வலியுறுததினார். (யே)



அவுஸ்திரேலியாவின் மெல்பேண் நகரில் உள்ள கோப்பரேஷன் லேன், அந்நாட்டின் பிரபல ரொக் இசைக்குழுவான ஏசி/டிசி இசைக்குழுவின் பெயரால் பெயர் சூட்டப் படவிருக்கிறது.

## WORLD NEWS உலக தரிசனம்

# சுதந்திர பத்திரிகையாளர் சவூதி அரேபியாவில் கொலை

(டுபாய்)

பி.பி.ஸி செய்தி ஸ்தாபனத்திற்காக சவூதி அரேபியாவில வேலை செய்து வந்த சுதந்திர பத்திரிகையாளர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் இன்னுமொரு செய்தியாளர் படுகாயங்களுக்குள்ளானார்.



ஒரு வாரத்திற்கு முன்பு சவூதிக்குச் சென்ற படப்பிடிப்பாளரான சைமன் கியூம்பர்ஸ் (36வயது) என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் 42 வயதான பிரான்ஸ் கார்டினர் படுகாயங்களுக்காளானார்.

இவர் அல்-குவெய்டா இயக் கம் தொடர்பில் தகவல் சேர்ப் பதில்கை தேர்ந்தவர் என்று பி.பி. ஸி அறிவித்தது.

இக்கொலைக்கு சவூதி உள்துறை அமைச்சு இஸ்லாமிய தீவிரவாதிகளைக் குற்றம் சுமததியுள்ளது. 200பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து 22பேர் கொல்லப்பட்ட நிகழ்ச்சியின் பின் ஒரு வாரம் சென்ற நிலையில் இக்கொலை இடம் பெற்றது. (யே)

# தேர்தல் பணியாளர்கள் மீது ஆப்கான் தலிபான்கள் தாக்குதல்

(காபூல)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆப்கானிஸ்தானில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் தொடர்பிலான ஆயத்தப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் தேர்தல் பணியாளர் மீதும் தலிபானகள் தாக்குதலை மேற்கொண்டனர். கோஸ்ட் மாகாணத்தில் இருந்து கார்டெஸ் நகரம் நோக்கி ஐந்து ஐக்கிய நாடுகள் வாகனத்தில் சென்ற உள்நாட்டு வெளிநாட்டு தேர்தல் பணியாளர்கள் திடீர் என வெடித்த இரண்டு குண்டுச் சத்தங்களால் அதிர்ச்சியடைந்தனர். அதனைத் தொடர்ந்து துப்பாக்கிகள் ஆர்.பி.ஜி. மற்றும் கைக் குண்டுகளால் தாக்கப்பட்ட போது பாதுகாப்புக்குச் சென்ற பொலிஸார் திருப்பித்தாக்கினர். அதனால் தாக்குதல் நடத்தியோர் பின்வாங்கிச் சென்றனர்.




உடனடியாக அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்களும் தாக்குதல் விமானங்களும் தரைப்படையினரும் தேடுதல்களை மேற்கொண்டனராயினும் எவரும் கைது செய்யப்படவில்லை. இச்சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 10 மில்லியன் வாக்காளரில் இதுவரை 3மில்லியன் வாக்காளர் தம்மை பதிவு செய்துள்ளனர்.இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் அவர் (யே)

## 5 நாள் 'துக்க தினத்தை தொடர்ந்து

# றேகனின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை

(சிமி வலி-கலிபோர்னியா)

கடந்த சனிக்கிழமை தனது 93 வது வயதில் காலமான அமெரிக்க முந்நாள் ஜனாதிபதி ரொனால்ட் றேகனின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்படும். என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.



சிறந்த மக்கள் தொடர்பாளராகவும் சமாதானப் பிரியராகவும் பழமைவாதிகளின் சம்பியனாகவும் வர்ணிக்கப்படும் றேகனைக் கௌரவிக்கும் முகமாக 30 நாட்களுக்கு அமெரிக்கக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


'5நாட்கள் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டு, எதிர் வரும் வெள்ளிக்கிழமை அவரது சொந்த ஊரான பெல் எயார் மாவட்டத்திலுள்ள சிமி-வலியில் றேகன் நூலகத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்றும் அன்றைய தினம் தேசியப் பாதுகாப்புத் தவிர்ந்த அரச சேவைகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று தனது நிறைவேற்று அதிகாரம் மூலம் ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.

நேற்று அவரது சொந்த ஊரில் இருந்து அவரது உடல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, றேகன் நூலகத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக இன்று வரை வைக்கப்பட்டுள்ளது. இன்றுதலைநகர் வாஷிங்டனுக்கு எடுத்துச் செல்லப்படும். அவரது உடல் வியாழன் வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வெள்ளிக்கிழமை மீண்டும் கலிபோர்னியாவுக்கு கொண்டுவரப்படும்.

30வருடங்களில் இடம்பெறும் அரச மரியாதையுடனான முதல் இறுதி அடக்கம் இதுவாகும். உலகின் பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கலந்து கொள்ளும் இந் நிகழ்ச்சிக்கு நாடுமுழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (யே)

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் ஒருவர் பலி 9 பேருக்குக் காயம்

(பக்தாத்)



ஈராக்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இரண்டு தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் ஒரு அமெரிக்கர் உட்பட ஒன்பது பேர் காயமடைந்தனர். ஒரு அமெரிக்க வீரர் கொல்லப்பட்டார்.

காயமடைந்தவர்களில் எட்டுப் பேர் ஈராக்கியராவர். பலியான அமெரிக்க வீரருடன் ஈராக்கில் பலியான அமெரிக்கர்களின் எண்ணிக்கை 827 ஆக அதிகரித்துள்ளது. இத் தாக்குதலுக்கு இஸ்லாமியக் குழுவான அபு முஸாப் அல்-ஸர்காவி உரிமை கோரியுள்ளது.

இதேவேளை கடந்த ஞாயிறு அமெரிக்கத் தளம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டதுடன் இன்னுமொருவர் காயமடைந்தார்.

48 பேர் இத் தாககுதலில் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

அடையாளம் காணப்படாத ஜிஹாத் குழுவொன்று இத் தாக்குதலுக்கு வெப் தளம் ஒன்றின் மூலம் உரிமை கோரியுள்ளது இத் தாக்குதலில் ஈராக்கின் தியாகிகள் இருவர் உயிரை இழந்ததாகவும் அது அறிவித்தது. (யே)

# ரொனால்ட் வில்சன் ரேகன்

# எளிய ஆரம்பங்களும் வலிய சாதனைகளும்

**பேதுரு யேசுதாசன்**
**பகுதி-1**

1981 தொடக்கம் 1989வரை ஏறத்தாள ஒரு தசாப்தகாலம் அமெரிக்க ஜனாதிபதி எனும் உலகத் தலைமைத்துவக் கதிரையில் உட்கார்ந்து, தனது சிறிய அசைவுகளைக்கூட உலகம் கண்கொட்டாமல் கவனிக்க வைத்த கவர்ச்சிமிகு தலைவரும் பழைமைவாத அமெரிக்க அரசியலுக்குப் புத்துயிர் கொடுத்து சோவியத் ரஷ்யாவுடனான பனிப்போர் அந்நாட்டின் வீழ்ச்சியை நோக்கிச் செல்லும்படியான ராஜதந்திர நகர்வுகளைத் துரிதப்படுத்தியவருமான அமெரிக்காவின் 40வது ஜனாதிபதி ரொனால்ட் ரேகன் தனது 93வது வயதில் காலமான செய்தி உலகம் முழுவதையும் ஒரு நொடி ஸ்தம்பிக்க வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை!

''மிகப்பெரிய சாதனைகளெல்லாவற்றின் ஆரம்பங்களும் மிகச் சிறியவைதான்'' என்று சொல்வார் ரஷ்ய எழுத்துலக மேதை லியோ டோல்ஸ் டோய். அதற்கு உதாரணமாகப் பரந்து படர்ந்து வியாபித்திருக்கும் ஒரு ஆலமரத்தின் படத்தையும் காட்டுவார்.

ரொனால்ட் ரேகனின் ஆரம்பங்களும் அப்படித்தான். அவை மிகுந்த வேதனைமிக்க மிகச் சிறிய ஆரம்பங்களாக இருந்தன. வாழ்க்கை மிகவும் போராட்டமாக அமைந்திருந்தது. அவ்


யுரேக்கா கல்லூரி நீச்சல் அணி தலைவராகவும் உயிர் காப்பாளராகவும் ரேகன் 1927.

வாறான அவலங்களையெல்லாம் தாண்டி உலகின் முதன்மைப் பதவி என்று கருதப்படும் அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு எப்படி வந்து சேர்ந்தார், என்னென்ன சாதனைகளைச் செய்தார். அமெரிக்காவும் உலகமும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டது என்ன? என்பது பற்றி இத் தொடர் கட்டுரை விளக்கும்.

''வாழ்க்கை என்பது மிகப் பெரும் இனிமையான பாடல், உன் இசையை வாசிக்கத் தொடங்கு''

ரொனால்ட் ரேகனைக் கவர்ந்த இந்த வாசகம் அவரது உயர் பள்ளியின் வருடாந்த அறிக்கையில் வெளிவந்த போது ரேகனின் ஆழ் மனதில் இது ஒரு வித தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதன் தாக்கத்தின் காரணமாகவே ரொனால்ட் ரேகன் தனது 93 வருட பூரண வாழ்வில் உயிர்காப்பாளராகவும், திரைப்பட நடிகராகவும், ஆளுநராகவும், ஜனாதிபதியாகவும் வெற்றிகரமான வாழ்க்கை நடாத்த முடிந்தது.

ரொனால்ட் வில்சன் ரேகன் 1911ம் ஆண்டு மாசிமாதம் 6ம் திகதி ஜோன் எட்வேட் (ஜக்) ரேகனுக்கும் நெல்லி ரேகனுக்கும் இரண்டாவது புதல்வராக இலிநொய்ஸ் மாகாணத்தில் ரம்பிக்கோ கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தையார் மிகவும் ஊக்க மிக்கவராக விளங்கினார். தனது குடும்பத்திற்கு மென்மேலும் நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் அவர் ஊக்கமுடன் உழைத்தார். இருக்கும் நிலையிலிருந்து மேலும் வளர வேண்டும் என்பதற்காக ஆர்வமாக உழைத்தார். ஆயினும், அதிர்ஷ்டம் அவரது வாழ்நாளில் அவருடைய இளைய மகன் மூலமே கிட்டியது.


கலிபோர்னியா மாநில ஆளுநராக 1966

ரொனால்ட் ரேகனின் மூத்த சகோதரர் நீல் ரேகன் சிறு வயதிலிருந்தே குடிப்பழகத்திற்கு அடிமையாகித் தந்தையின் கடின உழைப்பையெல்லாம் விரயம்செய்து நோயாளியானார்.

## பாதரட்சை வியாபாரியின் மகன்

ரேகனின் தந்தையார் பாதரட்சைகள் விற்கும் ஒரு கடையில் விற்பனையாளராகப் பணிபுரிந்தார். தனது பிள்ளைகளின் எதிர்காலத்தை முன்னிட்டுக் குடும்பத்தை அங்குமிங்கும் மாற்றி மாற்றிக் குடிபெயர்ந்தவண்ணமிருந்த அவர், இல்லிநொய்ஸ் மாகாணத்திற்கு வந்த பொழுது அவரது நெடுநாள் கனவு நனவாகியது. அவர் நவீன பாதரட்சை உற்பத்தி செய்யும் கூட்டு வியாபாரம் ஒன்றை அங்கு ஆரம்பித்தார்.

ஒன்பது வயது நிரம்பிய ரொனால்ட் ரேகனை அவரது தாயார் கிறிஸ்தவ மதக் கொள்கைகளுக்கு ஏற்றபடி வளர்த்து வந்தார். ரோமன் கத்தோலிக்கரான தந்தையின் மதத்திலேயே அவரையும் தாயார் இணைக்க விரும்பிய போதும் 12 வயதில் புரட்டஸ்தாந்து மதத்தில் அவர் இணைந்தார்.


யூரேக்கா கல்லூரி உதைபந்தாட்ட வீரராக ரேகன்

ரொனால்ட் ரேகனின் தோற்றத்தைப் பார்த்தவர்கள் அவரை டைச்சு பையன்என்று அழைத்தனர். அதனால் அவர் டைச்சு ரேகன் என்று அழைக்கப்பட்டு வந்தார். மிகக் கடுமையான எளிய வாம்வக்கு மக்கியிலம் தந்தை ஜக் ரேகன் தனது பிள்ளைகளுக்கு கடுமையாக உழைப்பது மற்றும் குறிக்கோளுடன் வாழ்வது பற்றி இடைவிடாது வலியுறுத்தி வந்தார்.

## பாடசாலையில் பிரகாசிப்பு

டிக்சன் மேல்நிலைப் பள்ளி மாணவராக அவர் கல்வி கற்ற பொழுது அவரது திறமைகள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின.

மிகவும் உற்சாகமும் திறமையும் மிக்க ரீனேஜ் மாணவராக அவர் அங்கு விளங்கினார். மாணவர் அமைப்பின் தலைவராகவும் உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் அவர் முன்னணி வீரராகத் திகழ்ந்தார்.


யூரேக்கா கல்லூரியின் நீச்சல் அணி பயிற்றுவிப்பாளராக ரொனால்ட் ரேகன்

அதேவேளை, லோவல் பார்க்கில் நதியின் சுழியில் அகப்பட்ட சுமார் 77 பேரைக் காப்பாற்றி கரைசேர்க்கும் பணியில் 6 மாதங்களாக அவர் ஈடுபட்டதை பிந்நாளில் நினைவு கூர்ந்த ரேகன் அதுவே தமது வாழ்வின் மிகச்சிறந்த அத்தியாயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

யூரேகா கல்லூயில் அவர் பட்டப்படிப்பை மேற்கொண்ட போது அக்கல்லூரியினது உதைபந்தாட்டம்(அமெரிக்க) மற்றும் நீச்சல் அணிகளுக்கும் தலைவராக விளங்கினார்.

இக் கல்லூரியிலேயே அவர் முதன் முதலாக அரசியல் வாழ்விலும் காலடி எடுத்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. இங்கு இடம்பெற்ற பகிஷ்கரிப்பில் அதிருப்தியுற்ற கல்லூரி மாணவர் அமைப்புத் தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்த பொழுது ரேகன் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'வாழ்க்கையில் முதற்தடவையாக என்னுடைய பேச்சு, பலரது கவனக்கை ஈர்ப்பகை அங்கு நான் அவதானித்தேன்' என்று தனது சுயசரிதையில் ரேகன் குறிப்பிட்டுள்ளார்.

## குடும்பத்தின் கஷ்டநிலை

1930ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நலிவு காரணமாக தந்தையார் ஜக் ரேகனின் வியாபாரம் வீழ்ச்சியடைந்தது. அவர் அங்குமிங்கும் பயணம்செய்து விற்பனை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டார். கடையை அவர் மூடினார். குடியிருந்த வீட்டில் அரைவாசிப்பகுதியை வாடகைக்குக் கொடுக்க நேர்ந்தது. தாயார் ஒரு உடுப்புக் கடையில் வேலைக்கமர்ந்தார். மிகவும் பொறுப்புள்ள பிள்ளையான இளைய மகன் ''டச்சு'' ரேகன் இரவு வேளைகளில் வீடுகளில் பாத்திரம் கழுவும் வேலையில் ஈடுபட்டுக் குடும்பக் கஷ்டத்தைப் போக்கும் பணியில் தானும் பங்கு கொண்டார்.


பாடசாலை மாணவராக

காலப்போக்கில் நகரத்தில் வாழும் அளவுக்கு வசதிபோதாமையால் மிகச் சிறிய மாடிக் குடியிருப்பு ஒன்றிற்கு அவர்கள் சென்று குடியேறினர். சிறிது காலத்தின் பிற்பாடு தந்தையார் தனது வேலையை இழந்தார். இதனால் றொனால்ட் ரேகன் குடும்பத்தைக் கவனித்துக்கொண்டதோடு தனது சகோதரர் யூரேகா கல்லூரியில் கல்விகற்று வெளியேறவும் உதவினார்.

மேரியன் வோஸ்டர் எனப்படும் ரேகன் குடும்ப நண்பர் ஒருவர் றொனால்ட் ரேகனைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் மிகவும் கரிசனையும் பொறுப்புமுள்ள பிள்ளையாக விளங்கினார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஒலிபரப்பாளர் ரேகன்

1932ஆம் ஆண்டு யூரேகா கல்லூரியிலிருந்து சமூகவியல் மற்றும் பொருளாதாரப் பட்டதாரியாக அவர் வெளியேறினார். 21வயது நிரம்பிய இளைஞராகக் கனவுகளைச் சுமந்தபடி நலிவுற்ற அமெரிக்கப் பொருளாதாரத்திற்குள் சுபீட்சம் தேடி வெளிவந்தார் ரொனால்ட் ரேகன்.

டெஸ் மொயின்ஸில் டேவன் போர்ட் வானொலி நிலையத்தில் அவர் தனது முதற் பணியை விளையாட்டு நேர்முக வர்ணனையாளராக ஆரம்பித்தார்.

சுமார் ஐந்து வருடங்கள் பேஸ் போள் விளையாட்டு வர்ணனையாளராகப் பணியாற்றிய ரேகனின் குரலழகையும் மொழியழகையும், காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பும் பரபரப்பும் ஏற்படுத்தும் அவரது வர்ணனையைப் புகழாதவர் எவருமேயில்லை.



வானொலி அறிவிப்பாளராக ரேகன் 1934

வானொலியில் ஐந்து வருடங்களாக அவர் பணியாற்றி வந்த பொழுதும் ஹொலிவூட் திரையுலகில் தான் ஒரு நட்சத்திரமாக விளங்கவேண்டும் என்பதில் நீண்ட நாட்களாக உறுதியோடு காத்திருந்தார் ரொனால்ட் ரேகன்.

(தொடரும்)

# மாதவிடாயும் மாதவிடாய் ஒழுங்கீனங்களும்

## மருத்துவ விளக்கம்

வெ.நாகநாதன்
மருத்துவபீடம்
4 ஆம் வருடம்

குழந்தைகளை ஈன்றெடுத்து ஒரு நல்ல சமுதாயத்தினை உருவாக்குவதில் பெண் முக்கிய ஸ்தானததை வகிக்கிறாள். இப் பெண் சமுதாயத்தின் இனப் பெருக்க உறுப்புகளில் ஏற்படும் பாதிப்புகள் பெண்களை மட்டுமன்றி முழுச் சமுதாயத்திலும் தாக்கத்தினை விளைவிக்கின்றது? ஆகவே ஒவ்வொரு பெண்ணும் தனது இனப் பெருக்க உறுப்புக்களைப் பற்றியும் அவற்றில் ஏற்படும் நோய்கள் குணங்குறிகள் பற்றியும் அறிந்து வைத்திருத்தல் ஒரு பெண் சுகதேகியாக வாழ வழிசமைக்கும். நமக்கு ஏற்படும் நோய்களுக்கான குணங்குறிகள் ஓரளவு எமக்குத் தெரியுமாயின், நாம் உடனடியாக வைத்தியரை நாடி ஆலோசனை பெறுவதுடன், மூட நம்பிக்கைகளில் இருந்தும் நாம் விடுபடவும் வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டே இக்கட்டுரை இங்கு வரையப்படுகின்றது.

### மாதவிடாய்ச் சக்கரம்

மாதவிடாய் (**menstruation**) ஏற்படும் ஒழுங்கினங்களை பற்றி பார்ப்பதன் முன்னர் ஒரு சுகதேகிப் பெண்ணில் ஏற்படும் மாதவிடாய் பற்றிப் பார்ப்போம். மாதவிடாய் என்றால் ஒவ்வொரு யுவதிக்கும், மூப்படைந்த பெண்ணுக்கும் இவ் அனுபவம் தவிர்க்க முடியாத தொன்றாகும். இதனை மாதவிலக்கு, சூதகம் என்வும் பலவாறு அழைப்பர். மாதவிலக்கு எவ்வாறு நிகழ்கினறது என்பதை எடுத்து நோக்கின், கபச்சுரப்பியினால் ஏற்படுத்தப்படும் ஒரு உந்துதலினால் சூலகத்தில் உள்ள சூல் முற்றி வளர ஆரம்பிக்கும். மெதுவாக வளரும் சூல் முதிர்ச்சியடைந்து சூலகத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றது. இவ்வண்ணம் விடுவிக்கப்பட்ட சூல் பலோப்பியன் குழாய் ஊடாக செல்கிறது. அக் குழாயினூடாக செல்லுகையில் அச் சூல் விந்துடன் சேர்ந்து முளையமாகின்றது.

சூலகத்திலிருந்து சூல் வளரும அதேவேளை சூலகத்தில் உற்பத்தியாகும். பெண்பால் ஓமோன் காரணமாக கருப்பையின் உட்படலமும் படிப்படியாக வளர ஆரம்பிக்கும். வளருகின்ற முளையத்தை எதிர்பார்த்து அதன் தேவைக்கு ஏற்ப நல்ல இரத்த விநியோகத்தை வழங்குவதற்காக கருப்பையின் உட்சுவர்கள் தடிப்பாக வளர்ச்சியடைகின்றன. ஏதாவது காரணங்களினால் சூல் விந்துடன் இணையாவிடின் அது சிதைந்து விடும் நிலையில் இருந்த கருப்பையின் உட்படலம் சிதைந்து போவதற்கு ஆரம்பிக்கும். இச் சிதைவுற்ற பகுதிகளும் சீதமும் இரத்தமும் யோனியூடாக வெளியேறும். மாதவிடாய் அல்லது மாதவிலக்கு என கூறப்படுவது இவ் இரத்தப்போக்கையே. பூப்படைந்தது தொடக்கம் மாதவிலக்கு அற்றுப்போகும் வரை ஒரு பெண்ணுக்கு இச் செயற்பாடு தொடர்ச்சியாக ஏற்படும்.

### இவை தவிர்க்கப்பட வேண்டியவையா?


மாதவிடாய்க்காலத்தில் தளித்தல், உடற்பயிற்சியில் ஈடுபடல், குறித்த சில உணவுப் பொருட்களை உட்கொள்ளாது தவிர்த்தல் போன்றன மாதவிடாய் சம்பந்தமானமூட நம்பிக்கைகளாகும். மாதவிடாய்க் காலங்களில் குறிப்பாகப் பூப்படைந்த காலப்பகுதியில் அப்பெண்பிள்ளைகளுக்கு கொடுக்கும் உணவு வகைகளில் இறைச்சி, மீன், முட்டை எண்ணெய அடங்கிய உணவுப் பொருட்களை தவிர்ப்பது சில வயது முதிர்ந்தோரது வழக்கமாகும். இவ்வுணவுகளைக் கொடுப்பதால் வயிற்று வலி ஏற்படும் எனவும் இவை தீட்டை ஏற்படுத்தக்கூடிய உணவுவகைகள் எனவும் இவற்றை உண்பதால் மாதவிடாய்க்குருதி துர்நாற்றம் வீசும் எனவும் அவர்கள் கருதுகின்றார்கள். இவையெல்லாம் மூட நம்பிக்கைகளாகும். சிலரின் மாதவிடாய்க் காலங்களில் நீர்த்தன்மையுடன் மலம் வெளியேறுவதுண்டு. இது ஒரு சாதாரண நிலைமையாகும்.

மாதவிடாய்க் காலத்தில் வயிற்றோட்டம் ஏற்பட்டால் மாதவிடாயின் ஊடாக வெளியேறும் குருதியின் அளவு அதிகரிக்கலாம். யௌவனப் பருவத்தில் உடல துரிதமாக வளர்ச்சியடைவதாலும்,, மாதவிடாயின் போது குருதி வெளியேறுவதாலும் உடலிற்கு அதிக புரதமும் இரும்புச்சத்தும் தேவை. எனவே இக்காலத்தில் புரதமும் இரும்புச்சத்தும் அதிக சக்தி தரும் உணவுவகைகளை கொடுப்பதைக்கட்டுப்படுத்துவதால் உடல் வளர்ச்சி குறைவதோடு குருதிச் சோகையும் ஏற்படலாம்.

மாதவிடாய் நாட்களில் குளிப்பதால் வெளியேறும் குருதியின் அளவு குறைவடைந்துவிடும் அல்லது முற்றாக நின்றுவிடும் என்பது சிலரது அனுபவமாகும். மாதவிடாயின் போது போதிய அளவு குருதி வெளியேறாவிடின் அசுத்தமான இரத்தம் தலையை நோக்கிச்சென்று பிற்காலத்தில் மூளைநோய்கள் அல்லது வேறு உடற் கோளாறுகளை ஏற்படுத்தக் கூடும் என்ற தவறான நம்பிக்கையும் சிலரிடையே உண்டு. உடலில் ஒன்று சேரும் அசுத்த இரத்தம் ஒருமாதத்திற்கு ஒரு தடவை உடலில் இருந்து வெளியேறலே மாதவிடாய் என்று கருதுவோரும் இதனால் உடல் சுத்தமாதல் எனவும் கருதுகின்றனர். இதுவும் ஒரு மூடநம்பிக்கையே. என்னினும் மாதவிடாய் தொடர்பான தெளிவான விளக்கத்தை நீங்கள் பெற்றுள்ளதால் இவையாவும் ஆதாரமற்ற தவறான நம்பிக்கைகள் என்பதை எளிதில் புரிந்து கொண்டிருப்பீர்கள். மாதவிடாய் நாட்களில் குளிப்பதன் காரணமாக குருதி வெளியேறலில் குறைவு ஏற்படினும் கூட அதனால், உடலுக்கு எந்த வித தீங்கும் ஏற்படமாட்டாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேணடும். குறிப்பாக இவ்வாறான நாட்களில் சுத்தமாக இருப்பதற்காக குளிக்க வேண்டியது அவசியம் என்பதையும் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

உடலினுள் அமைந்துள்ள பால் உறுப்புக்களுக்கான குருதி வநியோகம் மாதவிடாய் காலங்களில் சற்று அதிகரித்துக் காணப்படுவது இயல்பு. எனவே அக்காலப பகுதியில் அடி வயிற்றுப்பகுதியில் இலேசான அசௌகரிய நிலை ஏற்படுவதும் இயல்பானதாகும். சில வேளைகளில் இடுப்புப் பகுதியிலும் இந்த அசௌகரிய நிலை ஏற்படக்கூடும். தேவைப்படின் பொதுவாகப் பயன்படுத்தும் வலி மாத்திரை வகை ஒன்றைப்பயன்படுத்தலாம்.

எனினும் மாதவிடாயானது உடலில் நிகழும் ஒரு இயல்பான நிகழ்வு என்பதை உணர்ந்து, நாம் அன்றாடக் கருமங்களிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபட வேண்டியதே முக்கியமானதாகும். இது மாதவிடாய் காரணமாக ஏற்படக்கூடிய அசௌகரியங்களை மறப்பதற்கு பெரிதும் துணையாக அமையும்.




### மாதவிடாய் ஒழுங்கீனங்கள்

(*மாதவிடாய் நிகழாமை Amenorrhea*)

ஒரு பெண்ணின் வாழ்க்கை வட்டத்தில் மாதவிடாய் நிகழாமை பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்கின்றது. இது சாதாரணமான உடற செயற்பாட்டினால் ஏற்படலாம். அல்லது நோயுள்ள ஒரு பெண்ணில் நோயுடன் தொடர்புடையதாக ஏற்படலாம். சாதாரண உடல் தொழில் இயல்புகளினால் ஏற்படும சந்தர்ப்பங்கள்.

★ பூப்படைவதற்கு முந்திய காலப்பகுதி :- சாதாரணமாக ஒரு பெண் 12 - 16 வயதெல்லைக்குள் பூப்பெய்துகின்றாள். இதற்கு முந்திய காலப்பகுதியின் போது சூலகத்தினுள் சூல்கள் விருத்தியடைகின்றன. அத்துடன் இக் காலப்பகுதியில் மாதவிடாயை ஏற்படுத்தத் தேவையான ஓமோன்கள் (ஈஸ்ரஜன், புரொஜெஸ்ரோன்) மிகக்குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. குருதியில் சூலகள் விருத்தியடைந்ததும் இது ஒரு வட்டத்திற்கு உள்ளாக்கப்படும போது மாதவிடாய் நிகழும்.

★ கர்ப்பகாலம் :- சூலானது கருக்கட்டப்பட்டதும், மாதவிடாய் நிகழாமை ஏற்படுகின்றது.

★ பாலூட்டும் காலம் :- ஒரு தாய் குழந்தையைப் பிரசவித்தவுடன் தாயின் உடலில் புரோலக்ரின் (**Prolactin**) எனும் ஓமோனின அளவு அதிகரிக்கின்றது. இக் காலப்பகுதியல் சூல்களின் வளர்ச்சி தடைப்படுகின்றது. குழந்தை பிறந்த பின் தாய் பாலூட்டாத விடத்து மாதவிடாய் 2-3 மாதங்களில் நிகழும். தாய் பாலூட்டல் நீடிக்கும் போது மாதவிடாய் நிகழாது இருக்கும் காலப்பகுதியும் நீடிக்கிறது.

★ முற்றாக மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னான காலம் **After the menopause** :- சூலகங்களில் தொழிற்பாடுள்ள சூல்களை உருவாக்கும் கலங்கள் (**Graafian follicles**) இல்லாது போகுமபட்சத்தில் இது நிகழ்கின்றது.

### நோயுடன் தொடர்புடைய மாதவிடாய் நிகழாமை (*Pathological Amenorrhea*) ஏற்படும் சந்தர்ப்பங்கள்

பெண்ணின் உடலில் ஏற்படும் ஏதாவது அசாதாரண நிகழ்வின் (நோயின்) காரணமாக மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம். இது இரண்டு வகைப்படும்.

1. முதலான மாதவிடாய் நிறுத்தம்.
2. துணையான மாதவிடாய் நிறுத்தம்

★ முதலான மாதவிடாய் நிறுத்தம் :-

சில வயதுவந்த பெண்களில் ஒரு போதிலும் மாதவிடாய் நிகழாத நிலமை காணப்படுகிறது. இதற்கு பல்வேறு காரணங்கள் ஏதுவாகலாம். சிலரில் மாதவிடாய் நிகழ்கின்ற போதிலும் கண்களினால் காண முடியாதவாறு அதாவது குருதி வெளியேற்றம் இன்றி இது நிகழ்வுகின்றது. இது யோனி வழியில் மென்சவ்வில் அடைப்பு ஏற்படல் அல்லது **Hymen** துணையில்லாத நிலை காணப்படல் போன்ற நிலமைகளில் ஏற்படலாம். இவர்களில் குருதி ஆரம்பத்தில் யோனிப் பகுதியில தேங்கும் பின்னர், கருப்பை, சூலகக் கான் என்பவற்றிலும் தேங்கிக்காணப்படலாம். இவற்றின் காரணமாக குணங்குறிகள் பலவும காணப்படும். நாரிநோ, வயிற்று வீக்கம், அமுக்கத்தினால் சிறுநீர் தேங்கிக்காணப்படும். இவர்களுக்கு மென்சவ்வில் சிறு துளையிடல் போன்ற சிகிச்சை மூலம் குருதியை வெளியேற்றல் மூலம் குணப்படுத்தலாம். அத்துடன் சில பிறப்புக் குறைபாட்டுக் காரணிகளாலும் கபச் சுரப்பியினால் சுரக்கப்படும் சில ஓமோன்களின் குறைபாடு சூலகத்தின் விருத்தியின்மை, கருப்பை விருத்திக் குறைபாடு போன்றவற்றாலும், முதலான மாதவிடாய் நிறுத்தம் ஏற்படலாம்.

★ துணையான மாதவிடாய் நிறுத்தம் :-

சில பெண்களில் மாதவிடாய் சில வருடங்கள் ஒழுங்காக நிகழ்ந்து பின்னர் நின்றுவிடுகின்றது. இது பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றது. பொதுவாக அறுபது வீதமான துணையான மாதவிடாய் நிறுத்தங்கள் மன அழுத்தங்களினாலேயே (**mental Strees**) நிகழ்வதாக அறியப்பட்டுள்ளது. உதாரணமாக போலியான கர்ப்பத்தரித்தலை (**PseudoPregnancy**) குறிப்பிடலாம்.

இங்கு சில பெண்களில் தாயாக வேண்டும் என்ற கூடுதலான ஆசையினாலோ அல்லது பிரசவத்தைப் பற்றிய அதிக பயத்தினாலோ கர்ப்பவதிகளுக்குரிய குணங்குறிகள் தோன்றுகின்ற அதாவது மாதவிடாய் நிற்றல் குமட்டல், வாந்தி, வயிறு வீக்கமடைதல் போன்ற மாற்றங்கள் இவர்களில் ஏற்படுகின்றன. இப்படியானவர்கள் திரும்பத்திரும்ப சிறுநீர்ப் பரிசோதனைகளை (**HCG**) செய்து தாங்கள் கர்ப்பம் தரிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். இருப்பினும் தாயாக வேண்டும் என்ற ஆசை அதிகளவில் உள்ளவர்களை நம்பவைப்பது கடினம்.

சில பெண்கள் தாங்கள் மெலிந்து அழகாக வரவேண்டும் என்ற அதிக ஆசையினால் உள்ளெடுக்கும் உணவின் அளவை குறைக்கின்றார்கள். இறுதியில் சில உணவு வகைகளைத் தவிர எல்லா உணவுகளையும் தவிர்க்கிறார்கள். இதனால் மூளையின் தொழிற்பாடு பாதிக்கப்பட்டு மாதவிடாய் நிறுத்தமும் ஏற்படுகின்றது. இப்படியானவர்கள் உணவு உள்ளெடுப்பதை அதிகரித்தால் (சாதாரணமாக) இக்குறைபாட்டை [illegible] ஆலோசனை பெறல் அவசியம்.

மற்றும் துணை மாதவிடாய் நிறுத்தமானது அகஞ்சுரக்கும் சுரப்பிகளின் ஒழுங்கீனங்கள், சூலகங்கள் பருமனடைதல், சூலகங்களில் ஏற்படும் கட்டிகள் போன்றவற்றாலும் நிகழலாம். இவற்றைவிட கருத்தடை மாத்திரை பாவிப்பவர்களில் கருத்தடை ஊசி பாவிப்பது நிறுத்தப்படும் போது மாதவிடாய் நிறுத்தம் நிகழலாம். இவர்களில் அனேகமாக 6 மாத காலப்பகுதியினுள் தாமாகவே மாதவிடாய் நிகழும். ஆனாலும், ஒரு தொகுதியினருக்கு ஏற்படுத்துவதற்கு சிகிச்சை மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

அதிகரித்த இரத்தப் போக்கு (**Menorr Hagia**)

★ மாதவிடாய் ஒழுங்காக உள்ள போதிலும் சில பெண்களில் இரத்தப்பெருக்கு அதிகளவில் பின்வரும் காரணங்களால் ஏற்படுகின்றது.

★ கருப்பை சூலகங்களில் ஏற்படும் நோய்கள், கட்டிகள்.

★ மன நிலை பாதிக்கப்படல், அதிக கவலை.

★ கர்ப்பம் தரித்தலில் ஏற்படும் பிரச்சினைகள்.

★ தொற்று நோய்கள்.

சில பெண்களில் பூப்பெய்திய சில காலங்களில் அதிகளவு குருதிப் பெருக்கு ஏற்படுகின்றது. இது பொதுவான ஒரு செயற்பாடல்ல. ஆகவே வைத்தியரை நாடி ஆலோசனை பெறுவது நல்லது. மற்றும் சில பெண்களில் குறுகிய கால இடைவெளியில் அடிக்கடி மாதவிடாய் நிகழ்கின்றது. இது பொதுவாக பின்வரும் சந்தர்ப்பங்களில் காணப்படலாம்.

★ திருமணம் முடித்து சில மாதங்கள்.

★ கருச்சிதைவின் பின்.

★ குழந்தை பிறந்த பின்

இவ்வாறு நிகழ்வதனால் குருதிச்சோகை ஏற்பட வாய்ப்புண்டு.

### மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் நோ (*Dysmenorrhea*)

★ பொதுவாக மாதவிடாயின் போது நோ ஏற்படுவதில்லை. இருப்பினும் சில பெண்களின் மாதவிடாயின் போது அதிக நோ ஏற்படுவதனால் அவர்கள் மிகவும் வேதனை அடைகின்றனர். இது பின்வரும் காரணங்களால் ஏற்படலாம்.

★ இடுப்புக்குழியில் ஏற்படும் தொற்று நோயினால் :- இதன் போது மாதவிடாய்க்கு முன்னரே நோ தொடங்கிவிடும். அத்துடன் இந் நோவுடன் அதிகரித்த இரத்தப் போக்கும் உடலுறவின் போது நோவும் ஏற்படும்.

★ தொற்று நோய் தவிர்ந்த காரணங்களினால் :- இக் காரணங்கள் பொதுவானதாகவும் பெரும்பாலும் இளம்பெண்களிலும் ஏற்படுகின்றது. இங்கு கருப்பைச் சுவரிலுள்ள தசைகளில் தசைப் பிடிப்பு ஏற்படுகின்றது. இதனால் கருப்பைச்சுவரிலுள்ள குருதிக் கலன்கள் அழுத்தப்பட்டு குருதி விநியோகம் தடைப்படுகின்றது. இதன் விளைவாக கடுமையான நோ (**Ischemic pain**) ஏற்படுகின்றது. இவற்றைத் தவிர கருப்பைக் கழுத்து மென்சவ்வுகள் இறுக்கமடைதல், ஓமோன்களின் சமநிலையற்ற தன்மை அதிகரித்த புரஸ்ற்ரகிளன்டின் (**Prostaylandin**) செயற்பாடு மற்றும் மாதவிடாய் மிகவும் வேதனையானது என நினைக்கும் மனநிலை போன்ற சந்தர்ப்பங்களிலும் இது ஏற்படுகின்றது. இவ்வாறான நோ திருமணம் செய்த பெண்களை விட திருமணம் செய்யாத பெண்களிலேயே காணப்படும். இவை சாதாரணமாக ஒரு பிள்ளை பிறந்தவுடன் குறைந்துவிடும். □

# விடுதலை வேருக்கு நீர் ஊற்றியபடியே தமிழீழ மாணவர்கள் நாம் தலைநிமிர்வோம்

## எழுச்சி நாளில் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

எமது தேசத்தின் மீதான ஆக்கிரமிப்பு மேகங்கள் எம்மை சூழ்ந்திருக்கும் வரையில் எமது முழு ஆற்றலையும் வெளிக்கொணர முடியாது என்பதையும் நாம் அறிவோம்.எமது தேசிய விடுதலையின வேருக்கு நீர் ஊற்றியபடியே தமிழீழ மாணவர்களாகிய நாங்கள் தலைநிமிர்வோம்.

மாவீரன் சிவகுமாரன், மேஜா முரளி இருவரினதும் ஆன்ம பலம எங்கள் ஒவ்வொருவர் மீதும் தன் சக்தியை பாய்ச்சட்டும். தமிழீழத் தேசிய ஆன்மாவாக உலகம் வியகக்கும் வகையில் எமது விடுதலைப் போர் சதுரங் கத்தில் வெற்றியை நோக்கி காய்நகர்த்தும் எம் தேசியத் தலைமைக்கு சகல வழிகளிலும் முண்டு கொடுபபோம்!

எம் எதிர்காலம் மாணவ சந்ததியினரின் சுதந்திரமான அறிவுத் தேடலுக்கு வழிசமைப்போம.

தமிழீழ மாணவர் எழுச்சி நாளான நேற்றுமுன் தினம் "ஆற்றலைத் தேடி" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள மாணவர் எழுச்சி நாள பிரகடனத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

தமிழீழ மாணவர் எழுச்சிநாள தாயகம் எங்கும் பரந்து வாழும் மாணவர் மனங்களில் எழுச்சி பொங்கும் நாள். தேசியத்தின் விடுதலைக்கான எழுச்சி ஒவ்வொருவரின மனங்களிலும் நிகழவேண்டிய வரலாற்றுக் காலம் இது.

கற்றுணரும் மனநிலை வேண்டும் என்பதற்காகவே பள்ளிகளை நாடுகின்றோம். விடுதலை வேண்டி நிற்கும் எமது தேசத்தின் புனர்நிமாணப் படையணியாக நாம் உருவாக வேண்டும்.

எமது வாழ்விற்கு உதவாத கல்விக் கொள்கையை எமக்குப புகுத்தவேண்டும் என்பதற்காக பள்ளிகள் தோறும் பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளும் கடடுப்பாடுகளுக்கும் உள்ளாகி ஒடுக்கப்படும் கல்வியில் சாதிக்க எங்களால் முடியாது என்ற தாழ் வுச்சிக்கலுக்குள் அகபட்டும், ஏச்சும், நையாண்டியும் நிறைந்த அதிகார வனமுறைக்குள் அகப்பட்டும் சுயம இழந்து,சுயம் பற்றி சிந்தித்து எதிர்காலத்தை நிாணயிக்கவே முடியாது நடைப்பிண வாழ்வு வாழும் நிலைமாற வேண்டும்.

எமது மன அழுத்தங்களில் இருந்தும் துன்பச் சுமைகளில் இருந்தும் விடுபடக்கூடிய வழி காட்டலே எமக்கு விருப்பமானது நாம் வேண்டுவதுமாகும்.

கல்வி முறைவழி என்பது மாணவர்களின் ஆற்றலை வெளிககொணரும் ஊடகம் எனற நிலை மாறி எங்களை நாங்கள் தொலைக்கும் நாட்களாய் பள்ளி நாட்கள கரைந்து போவதை நாங்கள் வெறுக்கின்றோம்.

சிறிலங்காவின் இனவாத அரசுகள் எம்மீது கட்டவிழ்த்து விட்ட ஒடுக்குமுறைகள் ஏராளம். தமிழீழ மக்களின் பெரும் சொத்து கல்வி என்பது அகிலம அறியும். அதனை சிதைக்க வென்றே பலவழிகளிலும் கட்டுப்பாடுகளை விதித்து வந்தது சிங்கள அரசு.

அதனையும் வென்று தமிழீழ மாணவர்கள் உலகெங்கும் தமது திறமையைக் காட்ட வெளிப்பட்ட போது, பேரினவாதிகளால் சகிக்க முடியாது போயிற்று. இனவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை தமிழீழத்தின் முக்கிய பட்டினங்கள தோறும் தூண்டிவிட்டு எமது முன்னேற்றத்தைத் தடுக்க முயன்றனர்.

சிறிலங்கா இராணுவம் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த தமிழீழ பட்டினங்கள் எங்கும் பண்பாட்டுச் சீரழிவினை திட்டமிட்டு மேற்கொண்டனர். பேரினவாதிகள் தமிழ்த் தேசத் துரோகக் குழுக்களும் இதற்குத் துணை போயின.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு தமிழீழ விடுதலைப் புலிகள் எமது பகுதி எங்கும் கால்பதித்த பின்பு எங்களால் உண்மைகளை உணர முடிகின்றது. பேரினவாத நச்சுப்புகையினுள் புதையுண்டு போன கணிசமான மாணவ சமூகத்தை நாங்கள் மீட்டு எடுக்க வேண்டும். தேசிய உயிருணர்வு அவர்களின் இதயச் சுவடுகளுக்கு செலுத்தப்படவேண்டும். அப்பொழுது தான் எங்கள் தேச விழுமியம் பேணப்படும். பாண்பாடும் காக்கப்படும்.

எமது தேசியத் தலைமையின் கீழ் விழிப்போடு நாங்கள நிமிரவே விளைகின்றோம். நாங்கள் எங்கள் வாழ்வு பற்றிக கற்பனை பண்ணவும் புதுவழி கண்டுபிக்கவுமான மனநிலை எமக்கு வேண்டும்.அதற்கான சூழல் வேண்டும். சுதந்திரம் வேண்டும். கலவிக் கூடங்களில் மட்டுமல்ல தேசமெங்கும் இந்த சுதந்திரம் வேண்டும்.

தமிழீழ மாணவர் சமூகத்தின் எழுச்சி என்பது எங்களுக்குப் புதிதல்ல.மாவீரன் சிவகுமாரன்,மேஜர் முரளி ஆகியோா தம்மைத்தாமே ஆகுதியாக்கித் தமிழீழத் தேசிய மாணவ சமூகத்தினை விழிப்படைய வைத்தனர். எத்தனை ஆக்கிரமிப்புக்கும் மத்தியிலும் பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் தாணடியும் எமது மாணவர்கள் தேசிய விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வந்துள்ளனர் என்றுள்ளது.

(உ-4)

## அதிரடிப் படையிலிருந்து விலக சிப்பாய்கள் பலர் நாட்டம்

### தடுத்து நிறுத்த உதவுமாறு அரசுக்கு கடிதம்

(கொழும்பு)

அதிரடிப் படையில் சேவையாற்றும் அதிகாரிகள் தொடர்ந்தும் தமது பணியை மேற்கொள்வதற்கு அரசாங்கம் உதவ வேண்டும் என அதிரடிப் படைப் பிரிவன் சிரேஷ்ட அதிகாரிகள கேட்டுள்ளனர்.

அவர்கள் அரசாங்கத்திற்கு இது தொடர்பாகக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

அதிரடிப் படைப் பிரிவைச் சேர்ந்த பலர் சேவையில் இருந்து விலகிக் கொள்ள நாட்டம் கொண்டுள்ளனர்.

அதிரடிப் படையில் 8 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றும் உத்தியோகத்தர் தமக்குரிய பதவி உயர்வுகளைப் பெறாத காரணத்தினாலேயே இவ்வாறு சேவையில் இருந்து விலக முற்படுகின்றார்கள்.

கடந்த காலங்களில் அதிரடிப படையில் 8 வருடங்களுக்கு மேல சேவையாற்றிய அதிகாரிகளுக்கு அவர்களின் திறமைக்கு ஏற்ப பதவி உயர்வு வழங்கப்பட்டு வந்தது.

பின்னர் பொலிஸ் சேவை ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டதையடுத்து, இந்தப் பதவி உயர்வுகள் ரத்துச் செய்யப்பட்டன.

எனவே, அதிரடிப் படை சேவையில் இவர்களை தக்கவைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-60,10)

## காரைநகர் களபூமியில் மின் இணைப்பு வழங்கலுக்கு பொது மக்கள் இடையூறு

(காரைநகர்)

காரைநகர் களபூமியில் இலங்கை மின்சார சபையினர் மின்கம்பங்களை நாட்டுவதற்கு சில பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை மின்சார சபையினரால காரைநகர் பகுதிகளிற்கு உயரழுத்த மின் இணைப்புக்களை வழங்கும் வேலைகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது இந்தநிலையில் களபூமி, கணவோடைப் பகுதியில் சிலர் தமது தனிப்பட்ட பகைமையைக காரணமாகக் கொண்டு வீதிகளில் மின்கம்பம் நாட்டுவதற்கு தடையாக இருந்து வருகின்றனர்.

இதனால்,மினசார இணைப்பு வேலைகளில் தாமதம் ஏற்படுள்ள அதேவேளை, அவ் வீதிகளிற்கு பொறுப்பான காரைநகர் தெற்கு பிரதேச சபையிடமும் தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் மின் இணைப்பு பெறாதவர்கள் முறையிட்டுள்ளதாகவும் தெரியவருகிது.(246)

## சுகா.சேவை தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அமைச்சர் விரைவில் சந்தித்துப் பேசுவார்

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற் சங்கக் கூட்டமைப்பினரின் கோரிக்கைகள் குறித்து ஆராயும வகையில் சுகாதார அமைச்சர் நிமல்சிறி பால டி சில்வா சுகாதார சேவைகள் தொழிற் சங்கப பிரதிநிதிகளுடன் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

இவ்வாரமளவில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட சகல மாகாணங்களின் ஆளுநர்கள்,பிரதம செயலாளர்கள, திறைசேரி அதிகாரிகள ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் அதற்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைககப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுகாதார ஊழியர்கள் சம்பள முரண்பாடுகள் குறித்து விரிவாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதால்,சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பினரின் நாளை வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவது என எடுத்த தீர்மானத்தைக் கைவிட வேண்டும் என்றும் அவா மேலும் கேட்டுக் கொண்டார்.

(60,10)

## சகல நீதிமன்றங்களும் விரைவில் கணனி மயப்படுத்தப்படவுள்ளன

(கொழும்பு)

நாட்டில உள்ள சகல நீதிமன்றங்களும் விரைவில் கணனி மயப்படும் என நீதிச் சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நீதிமன்றங்களின் செயற்பாடுகளை சீரமைத்து அதனை மேலும் துரிதப்படுத்துவதற்காகவே நீதிமன்றங்கள் யாவும் கணனிமயப் படுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்ட நீதிச்சேவை ஆணைக்குழு, உலக வங்கியின் உதவியுடன் மேற்கொளளப்படும் இந்தத் திட்டத்திற்கு 28 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாக வும் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் 10 கணனிகளும் ஒளி அமைப்பு முறையும் ஏற்படுத்தப்படும் என்றும் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. தற்போது நாடு முழுவதிலும் 200 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(60,10)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோண்டாவில மேற்கு திரு. சி. முத்துக்குமாரசாமி (பதில் உதவித் தொழில் ஆணையாளர் யாழ்ப்பாணம்) அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமைக்கும் நொத்தாரிசு பரீட்சையில் சித்தியடைந்தமைக்கும் இவரது சமூக, சமய பணிகள் தொடர்ந்தும் நீடிக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

சிங்கம் பார்மஸி
யாழ்ப்பாணம்.

(C/117)


## தனியார் பஸ் கட்டணம் உயரும்

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங் கள எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி முதல் அதிகாக்கப்படவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கமுனு விஜய ரத்தின தெரிவித்துள்ளார்.

ஆரம்பக் கட்டணமான 3 ரூபாவில் இருந்து அனைத்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளதாக குறிப்பட்ட அவர்,

புதிய கட்டணங்கள் பற்றிய விபரப் பட்டியல் தயாரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும்,அவை பூர்த்தியடைந்தவுடன் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ந-61,10)

## வாராந்த நிகழ்வு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப்படும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு சங்கானை சிவப் பிரகாசம் மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (உ-10)

## இன்று முதல் நடாத்தப்படவிருந்த அகிம்சை வழிப்போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றியத்தினால் இன்று நடாத்தப்படவிருந்த அகிம்சை வழிப்போராட்டம் தறகாலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களால் வேலை வாய்ப்பைப் பெறுவதற்கு வசதியாக தமது கற்கை நெறியைத் தரம் உயர்த்தும்படி கோரியே இநத அகிம்சை வழிப் போராட்டத்தை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜரொன்று கடந்த மாதம் 27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றிய இணைப்பாளரால் பீடாதிபதி ஊடாக அனுப்பி வைக்கப்பட்டதுடன், இது விடயம தொடர்பாக ஒன்றியத்தால் பத்திரிகையாளர் சந்திப்பொன்றும் நடாத்தப்பட்டது. இதனை அடுத்து, கையளிக்கப்பட்ட மகஜரின் பிரகாரம் துணைவேந்தரது பணிப்பின் பெயரில் கற்கை நெறியை மூன்று வருட காலத்திற்கு உயர்த்துவதற்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

எனவே இன்று செவ்வாய்க்கிழமை முதல் மேற்படி கோரிகையை முன்வைத்து தொடர்ச்சியாக நடாத்தப்படவிருந்த அகிம்சை வழிப்போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இவ் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(ந-18)

# புலிகளின் திட்டவரைபு பற்றிய ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன?

## விரைவில் வெளிநாட்டு இராஜதந்திரிகளூடாக வெளியாகும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான ஜே.வி.பி.யின் இறுதி நிலைப்பாடு அமெரிக்க, இந்திய மற்றும் ஐரோப்பிய யூனியனின் இராஜதந்திரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த வெளிநாட்டு இராஜதந்தரிகளின் பிரதிநிதிகளை, அவர்களின் கொழும்பிலுள்ள இல்லத்தில் தாம் சந்திக்கவுள்ளதாகவும், இச்சந்திப்பின் போதே தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான தமது இறுதி நிலைப்பாட்டினை தாம் அவர்களுக்குத் தெரியப்படுத்தவுள்ளதாகவும் ஜே.வி.பியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தொவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை தொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாட்டினை சர்வதேச நாடுகளுக்கும் தெரியப்படுத்த வேண்டிய அவசியம் கருதியே தாம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள விமல் வீரவன்ச, இலங்கையின் இறைமை, பாதுகாப்பு மற்றும சகல இனங்களுக்குமான சமவுரிமை என்பன பாதிக்கப்படாத வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டுமென பிரஸலசில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின் போது உலக நாடுகளால் கருத்துத் தெரிவிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

# தேரரின் குற்றச்சாட்டை திலக் கருணாரட்ண மறுக்கிறார்

(கொழும்பு)

தான் கடத்தப்பட்டதாகவும் எம்.பி. பதவியிலிருந்து இராஜினாமா செய்யும்படி வற்புறுத்தப்பட்டதாகவும் ஹெல உறுமயவின் வண. ஹத்துலுவே ரத்தனசீல தேரர் தெரிவித்த குற்றச்சாட் டுகளை திலக் கருணாரட்ண நிராகரித்துள்ளார்.

தான கடத்தப்பட்டதாகவும இராஜினாமா செய்ய வற்புறுத்தப்பட்டதாகவும் கூறி ரத்தனசீல தேரர் கடந்த வாரம் நீதிமன்றில் சிவில் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். வண. அக்மீமன தயாரட்ண தேரர் எம்.பியாக பாராளுமன்றில் நியமிக்கும் பொருட்டே தான் இராஜினாமா செய்யும்படி வற்புறுத்தப்பட்டதாகவும் அவரது பதிவியேற்பை தடை செய்யுமாறும் கோரியிருந்தார். இதன்படி நீதிமன்றும் அக்மீமன தேரரை பதவியேற்க தடுத்து வைத்துள்ளது.

இதேவேளை, தேரரின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை பொய்யானவை என திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார். மேலும ரததன சீல தேரர் தான கடத்தபபட்டதாக ஊடகங்கள்ஒவ்வொன்றிற்கும் ஒவ் வொரு விதமான கருத்துக்களை தெரிவித்து வருகிறார். இவை அனைத் தும் ஒன்றிற் குப் பின் முரணான வையாக உள்ளன. அவர் கூறி யதை சரியென ஏற்ப தற்கு யாரும் ஒரு முடிவிற்கும் வர முடியாதுள்ளது. இதுவே துரதிஷ் டமானது. இவ்வாறு தெரிவித்த திலக்கருணாரட்ண,

ஹெலஉறுமய பிக்குகள் தற்போது ஜே.வி.பியினரின் அச்சுறுத்தலுக் குள் ளாகியுள் ளதாகவும் சகல விடயங்களுமே ஜே.வி.பியின் விருப்பின்படியே நடைபெறுகின்றன என்றும் கூறினார். (ந-6)

# பொருண்மியக் கொள்கையை வெளியிடும் நிர்ப்பந்தத்தில் ஐ.ம.சு.மு. அரசு

(கொழும்பு)

புதிய அரசின் பொருண்மியக் கொள்கையை இம்மாதம் அறிவிக்கத் திட்டமிட்டு அதற்கான தயாரிப்படுத்தலில் ஈடுபட்டுள்ளதாக நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

தெளிவான பொருண்மியக் கொளகையை அறிவித்தாலேயே அபிவிருத்திக்கான கடன்களை வழங்க முடியும் என உலக வங்கி அறிவித்துவிட்ட இந் நிலையில் பொருண்மியக் கொள்கையை அறிவிப்பதற்கான ஏற்பாட்டில் சரத் அமுனுகம துரிதமாக ஈடுபட்டுள்ளார்.

6 சிங்கள மாவட்டங்களின் அபிவிருத்திக்கு 90 மல்லியன் டொலர்களை வழங்க உலக வங்கி இணங்கியிருந்தது. இதனை விடுவிக்க தெளிவான பொருண்மியக் கொள்கையை அது வேண்டிநின்றது. ரணில் அரசுக்கு முன்பதாக சந்திரிகாவின் ஆட்சியில் அதாவது 2002 ஆம் ஆண்டிற்கு முன ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு வங்கியான ஜே.பி. ஐ.சி. வாக்களித்த 500 கோடி ரூபா இபபொழுதே விடுவிக்கப்பட்டுள்ளது.

இது பழைய திட்டமான கண்டி குடிநீர் வழங்கலுக்கானதாகும்.

உலக வங்கி தமிழ் தாயகப் பகுதி புனர்வாழவிற்கு 30 மில்லியன் டொலர்களை வழங்க இணங்கி இருக்கின்றது என்று உலக வங்கியின் சிறிலங்காவிற்கான வதிவிட அதிகாரி பீற்றர் ஹரோல்ட் கூறியுள்ளார். (உ)

## பொதுமக்கள் சிரமம்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியிலுள்ள சிறு வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள், தானியங்கி அழுத்திகள் என்பன நீண்டகாலமாகச் செயலிழந்த நிலையில் உள்ளமையால், இரவு வேளையில் பொது மக்கள் பலத்த சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்துப் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களிற்கு அறிவிக்கப்படட போதும் இது சம்பந்தமாக எந்தவிதமான ஆக்க பூர்வ நடவடிக்கைகளும மேற்கொள்ளப்படவில்லை எனவும் கூறப்படுகின்றது. (உ-79)

## ஓய்வுபெறுகின்றனர்

(கோப்பாய்)

கோப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள் இம் மாதம் வேலையிலிருந்து ஓய்வு பெறவுள்ளனர்.

அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் திருமதி.ச.கனகராசா, புத்தூர் பஞ்சசிக வித்தியாலய அதிபர் ச.பத்மநாதன் ஆகியோரே ஓய்வு பெறவுள்ளனர். (உ-79)

# விவாத அரங்கு 3

விடயம்

A–9 பாதை த்மிழர் கலாசாரத்திற்கு

**விடிவைத் தருமா? அல்லது அழிவைத் தருமா?**

*விவாத விடயத்தை முன்வைக்கிறார் வரணியூரைச் சேர்ந்த A. சங்கீதா.*

நடுவர்:-

ஈழத்தின் பிரபல எழுத்தாளர் பொன். கணேசமூர்த்தி (முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை)

*உங்கள் வாதங்களை எழுதி அனுப்புங்கள்*

அனுப்பவேண்டிய முகவரி:-

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாண்ம்.


**அன்பார்ந்த மாணவர்களே!**

வலம்புரியின் மற்றுமோர் கல்விச் சேவை

**க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்**

மிக விரைவில் உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்.


# வலம்புரி - சங்குநாதம்

## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுனர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில், பிரதேச செய்தியாளர்களை (பயிலுனர்கள்) நியமிப்பதற்கான விண்ணபபங்கள் கோரப்படுகின்றன.

- ♦ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த. (சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ பயிலுனர் தரத்தில் மூன்று மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருந்தியும் ஒழுங்கும் - ஆர்வமும் காணப்படுமடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.
- ♦ பயிலுனராக தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.
- ♦ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.
- ♦ இலங்கையில் இருந்து வெளிவரும் எந்தப் பத்திரிகையிலும், ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.
- ♦ ஏற்கனவே பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தரச் செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

### தகுதியானவர்கள்

முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, விவாக நிலை, தொழில்புரியும் இடம், பதவி (இருப்பின்), கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, பிரதேச சபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம் (இருப்பின்) கல்வித்தகைமை, பிறதகைமை என்பவை உள்ளிட்டதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

**பிரதம ஆசிரியர்,
வலம்புரி, சங்குநாதம்,
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்**

எனும் முகவரிக்கு 15.06.2004க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ, அன்றி தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்*

### பிரதேச செய்தியாளர் (பயிலுனர்) தெரிவிற்கான பிரதேசங்கள்

*வலிகாமம்*

திருநெல்வேலி
நல்லூர்
கந்தர் மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தங்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
வண்ணார்பண்ணை
கொட்டடி
பாசையூர்
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
புன்னாலைக்கட்டுவன்
அச்செழு
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை
கரம்பொன்
நாரந்தனை
சரவணை

*தீவகம்*

மண்டைதீவு
அல்லைப்பிட்டி
வேலணை
புங்குடுதீவு
நயினாதீவு
நெடுந்தீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்

*வடமராட்சி*

கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரி மூலை
கொற்றாவத்தை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
பொலிகண்டி

*தென்மராட்சி*

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

*வன்னிப் பிராந்தியம்*

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முல்லைத்தீவு
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவ மடு

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் - குறள்

வலம்புரி

## எதிர்க் கட்சிகளைப் பிரிக்கும் ஜனாதிபதியின் யுக்தி

பரிசுத்த மானிடர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள முற்பட்ட ஜே.வி.பியினர் ஆட்சிப் பீடத்தில் நீடிக்கும் ஆசையினால், கொண்ட கொள்கையை மாற்றி அமைத்துள்ளனர்.

25 அமைச்சர்களுக்கு மேல் அமைச்சர்களை நியமிக்கக்கூடாது. இதனால் மக்களின் வரிப் பணம் வீண் விரயமாகிறதென தேர்தல் மேடைகளில் கூக்குரல் இட்ட ஜே.வி.பி. இப்போது அதனை மாற்றியமைத்து அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

தேர்தலில் வாக்குகளைத் தமது பக்கம் திருப்புவதற்கு வசதியாக தங்களைப் பரிசுத்தமானவர்களாகக் காட்டமுற்பட்ட ஜே.வி.பியினர் இப்போது தமது ஆட்சிக்குப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்காக எதிர்க் கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்கு வருபவர்களுக்கு அமைச்சுப் பதவியை வழங்கச் சம்மதம் தெரிவித்துள்ளது.

அது மட்டுமன்றி எதிர்க் கட்சியில் இருந்து ஆளும் கட்சிக்கு ஆதரவைப் பெறுவதற்காக பிரசாரம் செய்வதிலும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஈடுபட்டுள்ளார். இவையெல்லாம் பரிசுத்த மானிடக் கொள்கைக்குப் பொருத்தமற்றது என்பதை ஜே.வி.பி. மறந்து போனமைதான் அதிசயமானதாகும். எதுவாயினும் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இருக்கக் கூடிய பாரிய பொறுப்பு ஆட்சியைத் தக்கவைப்பதேயாகும்.

அதாவது, பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துவிட்டால் போதும் என்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், அவர் சார்ந்த அமைச்சர்களும் படாதபாடு படுகின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு கிடைக்குமென எதிர்பார்த்த அரசுக்கு ஆறுமுகம் தொண்டமான் விதித்த நிபந்தனைகள் ஆத்திரத்தையே ஊட்டின. ஆறுமுகம் தொண்டமானின் நிபந்தனையை நிறைவேற்றுவதிலும் பார்க்க எதிர்க் கட்சி வரிசையில் இருப்பதே மேலென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறிவிட்டார். இந் நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு அரசுக்குக் கிடையாதென்பது உறுதியாகிவிட்டது.

அதேபோல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதில் அரசுக்கு இடைஞ்சல்கள் இருக்கவே செய்கின்றன. ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் ஆட்சிப் பலத்தை இழப்பதற்கும், தேர்தல் வருவதற்கும் காரணமாக இருந்தவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீமே.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொது ஜன ஐக்கிய முன்னணியில் கப்பல், துறைமுகங்கள் அமைச்சராக இருந்த ரவூப் ஹக்கீம் கல்முனையைத் தனி மாவட்டமாக்குவது முதல் பல்வேறு நிபந்தனைகளை முன்வைத்து ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்தார். தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து மந்தர மலையைக் கடைந்தபோது வலிபொறுக்க முடியாத வாசுகிப் பாம்பு ஆலகால விஷத்தைக் கக்கியது போல், ஜனாதிபதி சந்திரிகாவும் ஹக்கீமின் கெடுபிடியைத் தாங்க முடியாமல் அவரை அமைச்சர் பதவியில் இருந்து தூக்கியெறிந்தார்.

இதனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு பொது ஜன ஐக்கிய முன்னணிக்குக் கிடைக்காமல் போக, எதிர்க் கட்சி வரிசையில் இருந்து சந்தர்ப்பம் பார்த்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டது.

இதனைப் புரிந்து கொண்ட ஜனாதிபதி நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தனது அரசு தோல்வி காண்பதை விரும்பிக் கொள்ளாமல் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு அறிவிப்புக் கொடுத்தார். அந்தத் தேர்தலிலேயே ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிப் பீடமேறியது.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியில் ரவூப் ஹக்கீம் அமைச்சுப் பதவியை வகித்தாலும் ஜனாதிபதியின் 'சாபம்'போல ஹக்கீமின் அரசியல் வாழ்க்கை மட்டுமன்றித் தனிப்பட்ட வாழ்க்கையும் இப்போது சின்னாபின்னமாகிச் செல்லாக் காசாகிவிட்டது. அந்தளவில் ஹக்கீமின் ஆதரவைவிடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸுக்குள் பிளவையேற்படுத்தி அதிலிருந்து ஆதரவைப் பெறுவதே ஜனாதிபதியின் யுகதியாகும். ஜனாதிபதியின் இந்த யுகதிக்கு ஏனைய எதிர்க் கட்சிகளும் பலியாவது உறுதி.

# பாராளுமன்றக் கதிரைகளுக்காக அலையும் ஜே.வி.பியை எவரும் பொருட்படுத்தக் கூடாது

## ம.ம.மு.தலைவர் பெ.சந்திரசேகரன்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாகவும் தற்போது ஜே.வி.பியினர் முன்வைத்து வரும் கருத்துக்களை கணக்கில் எடுத்துக் கொள்ளவே தேவையில்லை என்று



மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் கருத்துத் தெரித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிட வேண்டும் என்ற தொனியில் ஜே.வி.பி வெளியிட்டு வரும் கருத்துக் குறித்து கருத்து வெளியிடும் போதே சந்திரசேகரன் இதனைத் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை வன்னி சென்று சந்தித்து திரும்பிய பின்னர் பத்திரிகையாளர்களை சந்தித்த போது இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் கருததுரைக்கையில்,

ஒரு காலத்தில் ஆயுதமேந்தி புரட்சி செய்ததாக கூறிய இவர்கள் இன்று பாராளுமன்ற ஆசனங்களைக் கூட்டிக் கொள்வதற்கான வழிதேடி அலைகின்றார்கள். செல்வாக்கும், மதிப்பும் பெற்ற அமைச்சுக்களை பெற்றுக் கொள்வதற்காக ஜே.வி.பியினர் பேரம் பேசுகின்றார்கள்.

சிங்கள மக்களின் வாக்குகளைப்பெற்றுக் கொள்வதற்காக எல்லாவிதமான குறுக்கு வழிகளையும் கையாளுகின்றார்கள். இனவாதமும், மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் செய்கைகளுமே ஜே.வி.பியினரின் அரசியல் மூலதனமாகவுள்ளது.

இனப்பிரச்சினை தீர்ந்து நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டால், இவர்களின் இனவாதமும் குறுகிய கேவலமான அரசியல் யுக்திகளும் மக்கள் மத்தியில் எடுபடாமல் போய்விடும்.

புத்தகஙகளில் படிக்கும் தத்துவங்களுக்கும் நடைமுறைக்கும் உள்ள பாரிய வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாத, பாமரத்தனமான அரசியல் சிந்தனையில் ஏகாந்தக்கனவு கண்டு கொண்டு ஜே.வி.பியினர் இருக்கின்றனர்.

இந்தநிலையில், ஜே.வி.பியினரின் பரிதாபகரமான நகைப்புக்குரிய கருத்துக்களில் எல்லாம் கவனம் செலுத்தத் தேவையில்லை. தமிழர் பிரச்சினையானது இன்று சர்வதேசத்தின் கவனம் முழுவதையும் ஈர்த்துள்ளது. உலக நாடுகள் அனைத்துமே தமிழர்களுக்கு சகல உரிமைகளையும் வழங்க வேண்டும் என்பதனை ஒருமுகப்பட்டு ஏற்றுக்கொண்டுள்ளன.

உரிமைகளையும் சுதந்திரமான விடுதலையையும் பெறுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியில் நீண்டதூரம் சென்று விட்டார்கள். இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத ஜே.வி.பியினரின் புலம்பல்களையெல்லாம் மக்கள் கவனத்தில் எடுக்கத் தேவையில்லை.

இந்நாட்டில் இனவாதம் குறைய ஜே.வி.பியினர் இல்லாமல் போய்விடுவார்கள் என்பதே உண்மையான நிலையாகும் என்று தெரிவித்துள்ளார். (உ-121)

## வேலைநிறுத்தத்தில் தாதிமார் ஈடுபடார்

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நடத்தவுள்ள வேலைநிறுத்தப் போராட்டத்தில் அரசாங்க சேவைகள் தாதிமார் சங்கம் பங்குபற்றாது என சங்கத்தின் தலைவர் மொறத்தட்டுவே ஆனந்ததேரர் அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சுகாதார சேவை தொழில் சங்கக் கூட்டமைப்பு இவ்வாரம் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.அதற்கான அழைப்பு எமது சங்கத்திற்கும் அனுப்பப்பட்டிருந்தது.

புதிய அரசாங்கம் பதவியேற்ற சொற்ப காலத்திற்குள் எமது சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது.

எனவே வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்குகொள்வதில்லை என்ற தீர்மானத்திற்கு நாம் வந்துள்ளோம்.

இவைதவிர தற்போது டெங்குக் காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் மிக வேகமாகப் பரவிவருவதால் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் வேலைநிறுத்தப் போராட்டங்களை நடத்துவது நல்லதல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், அரசாங்கம் மருத்துவ உத்தியோகத்தர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-60,10)

## உண்மை நிலையை வெளியிடக் கோரி ஜாதிக ஹெல உறுமய உண்ணாவிரதம்

(கொழும்பு)

கத்துலுவே ரட்ணசீல தேரருக்கு பின்னணியில் இருக்கும் சக்திகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். அல்லது இலட்சக் கணக்கான மக்களைத் திரட்டி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை நல்வழிப்படுத்தும் நோக்குடன் பல திட்டங்களை முன்மொழிய தயார் நிலையில் இருக்கும் தம்மைப் பலவீனப் படுத்தவே அரசாங்கம் முனைவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள ஹெல உறுமய இரண்டுவார கால அவகாசத்தில் உண்மைநிலையை வெளிப்படுத்தாவிடின் கடுமையான எதிர்விளைவுகளை அரசாங்கம் சந்திக்க வேண்டி ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளது. (உ-121)

### ஓம் தினசரி தியானம்

**விவேகச் சிந்தனைகள்**

ஆபாசப் புத்தகங்கள், பத்திரிகைகள் இருந்தால் அக்னி தேவனுக்கு இரையாக்குங்கள். வீட்டில் ஆன்மீகப் புத்தகங்களையும் தேச பக்த வீரர்களின் வரலாற்றுப் புத்தகங்களையும் வாங்கிப் படிக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்

## பல்கலை மாணவன் கொலை சந்தேகநபர் தலைமறைவு

(கொழும்பு)

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கடந்த சனியன்று இடம்பெற்ற கொலைச்சம்வத்தில் சம்பந்தபட்டதாகக் கூறப்பட்ட முதலாம் ஆண்டு மாணவர் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

கொலையில் ஈடுபட்ட மாணவருக்கு உதவியதாகக் கூறப்படும் மூன்று மாணவர்கள் மிகொனாப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்கள். பல்கலைக்கழக வளாகத்தில் வைத்து குறிப்பிட்ட முதலாம் ஆண்டு மாணவரால் மூன்றாம் ஆண்டு மாணவரான சமிந்த பண்டார என்பவர் கூரான ஆயுதம் ஒன்றினால் குத்திக் கொல்லப்பட்டார்.

பல்கலைக்கழக மாணவர் சபை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையே இந்தக் கொலைக்குக் காரணம் என கூறப்பட்டாலும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மாணவர் ஒருவர் இந்தப் பல்கலைக்கழகத்தில் கொலை செய்யப்பட்டதை பழிதீர்க்கும குறியே இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பல்கலைக்கழகத்தில் பதற்ற நிலைமை தோன்றியுள்ளது.இப் பல்கலைக்கழகத்தில் ஜே.வி.பி. மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-121)

## கூட்டு இராணுவப் பயிற்சிக்காக அமெ.குழு இலங்கை வருகை

(கொழும்பு)

எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை இலங்கையில் ஆரம்பமாகவுள்ள கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்பார்வை செய்வதற்காக அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். கேணல் ஜேம்ஸ் எல்.கம்பஷலின் தலைமையிலான குழு ஒன்று வெள்ளியன்று இலங்கை வந்துள்ளது.

இந்த கூட்டு இராணுவப் பயிற்சியில் இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், மங்கோலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த இராணுவப்படை அணிகள் பங்குபற்றவுள்ளன.

இது போன்ற பயிற்சிப் பட்டறைகளின் மூலம் இலங்கை இராணுவப் படையை சர்வதேச ரீதியில் உயர்த்த முடியும். அத்துடன் இலங்கை பாதுகாப்புப் படையில் இணையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியுமென சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-10)

## பிரதி விளையாட்டு அமைச்சருக்கு ஹெல உறுமய கொலை அச்சுறுத்தல்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த சிலரால் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சி பொலிஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

தன்னைக் கொலை செய்வதற்காகவே தனது அலுவலகம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர் தொடர்ந்தும் தொலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதி அமைச்சர் ஸ்ரீபதி சூரியாராச்சியின் இந்தக் குற்றச்சாட்டை ஜாதிஹெல உறுமய முற்றாக நிராகரித்துள்ளது. (உ-60,10)

# காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

பதிவு செய்யப்பட்ட அரசாங்க மருத்துவர்கள் காலவரையற்ற தமது வேலை நிறுத்தப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

அரச மருத்துவர்கள் சேவைச் சங்கச் செயலாளர் டாக்டர் மகிந்த லியனகே வேலை நிறுத்தப் போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்;

மருத்துவர்களின் சம்பள முரண்பாடு விரைவில் தீர்க்கப்படுமென தற்போதைய அரசாங்கம் உறுதியளித்து வருகின்றதே தவிர அது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இதனாலேயே நாம் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்றார். இதேவேளை அரசாங்க வைத்தியசாலைகளில் அரச மருத்துவர்கள் சேவைச் சங்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு மருத்துவர்கள் பலர் ஆதரவு தெரிவிக்கவில்லையென்றும் அவர்கள் வழமை போன்று நேற்று மருத்துவ சேவையில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-60,10)

# பொது அமைப்புக்களுக்கு இன்று அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாபெரும் கண்டனப் பேரணியை முன்னிட்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இக்கலந்துரையாடலுக்கு,

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், பல நேக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் யாழ்.வணிகர் கழகம், ஏனைய வர்த்தக சங்கங்கள், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் சர்வ தேச மாணவர் பேரவை ஏனைய பொது அமைப்புக்கள், அரச ஊழியர்கள், கல்விச் சமூகம், தனியார் கல்வி நிறுவனம் போன்றவற்றின் தலைவர், செயலாளர் ஆகியோரைச் சமூகமளிக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ச)

## இனப்பிரச்...

களின் சேவையும், வலிமையும் தொடர்ந்தும் தேவைப்படுகிறது.

யுத்தத்தில் உயிர்த் தியாகம் செயத, அவையவங்களை இழந்த இராணுவ வீரர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட இராணுவ வீரர் அதிகார சபையின் செயற்பாடுகளையும் விரிவுபடுத்தப் போவதாக அங்கு உறுதியளித்த ஜனாதிபதி, யுத்தததில் உயிர் நீத்த இராணுவ வீரர்களின் தியாகத்தை அர்த்தமுள்ளதாக ஆக்கும் வண்ணம் அனைத்து மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு, ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

## மல்வத்த...

ருந்த இவர் நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் அங்கு மரணமானார்.

1916ஆம் ஆண்டு பிறநத தேரர் தனது 14வது வயதில் பௌத்த துறவியானார். 8ஆண்டுகளின் பின்னர் உபசம்பதா என்ற பௌத்த தீட்சையைப் பெற்றார்.

இலங்கையின் பௌத்த பீடங்களில் ஒன்றான மல்வத்த பீடத்திற்கு 1989ஆம் ஆண்டு மகா நாயக்கராக இவர் நியமிக்கப்பட்டிருந்தார். (ச)

## இலங்கையின்..

தெற்காசியாவில் உள்ள அண்டை நாடுகளுடன் நெருங்கிய அரசியல், பொருளாதார உறவுகளைக் கட்டியெழுப்பி அதன் மூலம் 'சார்க்'கமைப்பை வலுப்படுத்தும் நடைமுறைகளுக்கு அரசாங்கம் ஆகக் கூடியதான நிதியுதவிகளை வழங்கும்.

சகல பிராந்திய மற்றும் சர்வ தேச விடயங்களில் இந்தியா சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்குமென வலியுறுத்திக் கூறிய ஜனாதிபதி அப்துல் கலாம் இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியாவின் தார்மீகமான ஆதரவு என்றும் உண்டென்று வலியுறுத்திக் கூறியுள்ளார். (ம)

# கௌதாரி முட்டை எடுத்தவரின் கையைப் பாம்பு தீண்டியது

(நவக்கிரி)

கௌதாரி முட்டை எடுத்த வேளை கையைப் பாம்பு தீண்டிய சம்பவம் அண்மையில் அச்சுவேலி தோப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதேஇடத்தைச் சேர்ந்த வை. வசந்தராசா(வயது30) என்பவரே இவ்வாறு பாம்பு தீண்டிய நிலையில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதிகாலை 4 மணியளவில் தோட்டத்திற்குச் சென்றபோது அருகில் காணப்பட்ட பற்றைக்குள் இருந்த கௌதாரி முட்டையை எடுத்தவேளை புடையன் பாம்பு ஒன்று கையைக் கவ்வியபடி வெளியே வந்து விழுந்ததாகத் தெரியவருகிறது. (உ-233)

# மூதூர் நீதிமன்ற நீதிவான் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

மூதூர் நீதிமன்ற நீதிவான் ஏ.எல்.ஏ.கபூர் நீதிச் சேவை ஆணைக் குழுவினால் நேற்று முதல் சேவையில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடை நிறுத்தம் உடனடியாக அமுலுக்குவருவதாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜயதிலகா தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கு மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தி, நீதித் துறைக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைப் பரிசீலித்து உறுதிப்படுத்திக் கொண்டபின்னரே அவரது சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டதாக நீதிச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## சுகாதார...

யோகத்தர்கள், வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் மற்றும் மருந்தாளர்கள், சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாளை வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதுடன் காலை 9 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு முன்னார் ஒன்று கூடுமாறு ஸ்ரீலங்கா பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க யாழ்.கிளைத் தலைவர் யா.நக்கீரன் கேட்டுள்ளார். (ச-252)

## கூட்டமைப்பு...

சுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது குறித்து இக் கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கட்சித்தலைவர்களுக்கிடையில் நேற்று இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் முடிபுகள் எதுவும் எட்டப்படாத நிலையில் முடிவடைந்துள்ளது.

இதேவேளை கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று இன்று காலை 9.30 மணியளவில் மீண்டும் கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்றும் இன்றுகாலை இடம் பெறவுள்ளது. (த-121)

## மூன்று...

பட்டு 28 மாதங்களாகியும் தமிழர் தாயகத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்பட்டு, மீண்டுமொரு போரைத் தமிழ் மக்கள் மீது திணிக்கும் முயற்சிகள் தொடங்குவதுபோல் தெரிகிறது. இதைத் தமிழ மக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். இதனை யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கடுமையாக எதிர்க்கும்.

புதிய அரசை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அமைத்த போது போர் நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடருமென அறிவித்தார்.

ஆனால், ஜனாதிபதியின் உறுதிப்பாடற்ற தன்மையினால் பேச்சுவார்த்தை மேசைக்கு அவரால் வரமுடியவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைக் கையளிக்க ஜனாதிபதி தவறிவிட்டார்.

மேலும், ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு தனது அசமந்தப்போக்கைக் கைவிட்டு எமது மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைக்க வேண்டுமென இவ்வறிககை மூலம் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கிறது. இவ்வாறு அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1ல் இருந்து மேற்படிப்பு வரை **SPOKEN ENGLISH, GRAMMAR** By. விக்னேஸ்வரன ஆச்சாரி. 426(302) **K.K.S** வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை

# நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

வளர்ப்பு நாய்களுக்கான 'விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி' இன்று காலை 9 மணி முதல் 12 மணி வரை கொக்குவில் தலையாழி இந்திரா சனசமூக நிலையத்தில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை யாழ். பல்கலைக் கழக சமுதாய மருத்து மாணவர்களும் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் மேற்கொண்டுள்ளனர். (ச)

* * *

ஊர்காவற்துறையில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் இன்று புளியங்கூடல் கிராம உத்தியோகத்தர் அலுவலகம், தம்பாட்டி சனசமூக முன்றல், பென்னாச்சிக் கடைச் சந்தி ஆகியவற்றில் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (உ-75)

# நேர்முகத் தேர்வு

(நவக்கிரி)

பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான நேர்முகத் தேர்வு நாளை 9ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையான 3 தினங்கள் காலை9 மணி முதல் பி.ப. 4 மணிவரை கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் தபாலில் இடப்பட்டுள்ளதாக உதவிப் பிரதேச செயலர் எ.சாந்தசீலன் தெரிவித்தார்.(உ-233)

# முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கோபபாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடாத்தும் முத்தமிழ் விழா இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு கலாசாலை ரதி லக்ஷ்மி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது இன்றைய நிகழ்வு முததமிழ் மன்றத் துணைத் தலைவர் ம.பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கா.உதயகுமார் தலைமையில் நடைபெறும் நாளைய நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு கலந்து கொள்ளவுள்ளார். (ச)

## அரசின்...

குறிப்பாக இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கி வரும் நாடுகளும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர்.

இதனால்தான் உதவும் நாடுகள் இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கப் பின்னடித்து வருகின்றன.

இதேவேளை, சமாதான நடவடிக்கைகளுக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்க மறுத்தால் அரசு அதனைத தூக்கிப்பிடித்துக் கொண்டு அவர்களுக்குப்பின்னால் செல்ல வேண்டியதில்லை.

சமாதான நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் ஐக்கிய தேசியக் கட்சி வழங்கும் என்றார். (உ-60,10)




**பதவி வெற்றிடம்**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண்கள் இரவுக்கடமை)
- கணனி பக்க அமைப்பாளர்கள் (பயிலுநர்கள் ஆண்கள்)
- அலுவலகச் செய்தியாளர்கள் (ஆண்கள்)
- ஓப்செட் மெசின் இயக்குநர்கள்
- ஓப்செட் மெசின் பயிலுநர்கள்
- பத்திரிகை மடிப்பவர்கள்
- சிற்றூழியர்கள்

தகுதியானவர்கள் தாங்கள் தெரிந்தெடுத்த பதவியை குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, *ஆளணி முகாமையாளர், வலம்புரி, இலக்கம் 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்* எனும் முகவரிக்கு 10.06.2004 க்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

குறிப்பு : யாழ். நகர மையத்திலிருந்து **10km** தூரத்திலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*நிர்வாக உத்தியோகத்தர்.*

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.